ப்ரஹ்மோபநிஷதம்



விளக்கம்

சுவாமி பிரபஞ்சநாதன்

ஓம் ஶ்ரீ குருப்யோ நம:

ப்ரஹ்மோபநிஷதம்

ब्रह्मोपनिषद्



விளக்கம்

சுவாமி பிரபஞ்சநாதன்

நூல் விளக்கம்

நூலின் பெயர்	:	ப்ரஹ்மோபநிஷதம்
ஆசிரியர்	:	சுவாமி பிரபஞ்சநாதன்
மொழி	:	தமிழ்
வகை	:	தன்னாட்டம்
முதற்பதிப்பு	:	2021
நூலின் அளவு	:	டெம்மி
பக்கங்கள்	:	68
தாள்	:	A5 (5.83" X 8.27")
எழுத்து அளவு	:	12 புள்ளிகள்
உரிமை	:	ஆசிரியருக்கு
கட்டமைப்பு	:	சாதா பைண்டு அட்டை
கணினி அச்சு	:	ஓம் கிராபிக்ஸ்
விலை	:	தரமுடியாதது

ப்ரஹ்மோபநிஷதம்

முகவுரை

உபநிஷதங்களின் வரிசையில் 11 - வது உபநிஷதமாக இந்த ப்ரஹ்மோபநிஷதம் உள்ளது. இதில் ப்ரஹ்ம ஞானமும், முக்தனாகும் உபாயமும் ப்ரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

நாம் பூணூல் மாற்றிக் கொள்ளும் பொழுது கூறப்படும் **யக்ஞோபவீத தாரண மந்திரம்** இதிலிருந்துதான் எடுக்கப்பட்டது.

இந்த ப்ரஹ்மோபநிஷதம் மொத்தம் 23 ஸ்லோகங்களைக் கொண்டது. அந்த ஸ்லோகங்களின் வாயிலாக அந்த பரப்ரஹ்மத்தை மனித உடலில் நான்கு இடங்களில், நான்கு வடிவங்களில் தியானிக்க முடியும் என்கின்றது இந்த உபநிஷதம்.

அவைகள் **தொப்பூழ், இருதயம், கழுத்து,** மற்றும் **தலை உச்சி** என்ற நான்கு முக்கியப் பகுதிகளின் மூலம் அந்த தெய்வீகசக்தி வெளிப்பட்டுக் கொண்டிருப்பதாக இந்த “**ப்ரஹ்மோபநிஷதம்**” எடுத்துக் கூறுகின்றது.

ब्रह्मोपनिषद्

ப்ரஹ்மோபநிஷதம்

சாந்தி பாடம்

ஓம் ஸஹநாவவது | ஸஹநௌ புநக்து |
ஸஹவீர்யம் கரவாவஹை | தேஜஸ்விநாவதீதமஸ்து |
மா வித்விஷாவஹை |
ஓம் சாந்தி | சாந்தி | சாந்தி: ||

ஸ்லோகம் - 1

अथास्य पुरुषस्य चत्वारि स्थानानि भवन्ति। नाभिर्हृदयं कण्ठं मूर्धेति । तत्र चतुष्पादं ब्रह्म विभाति ।जागरितं स्वप्न सुषुप्तं तुरीयमिति।

जागरिते ब्रह्मा स्वप्ने विष्णुः सुषुप्तौ रुद्रस्तुरीय-मक्षरम् । स आदित्यो विष्णुशेश्वरश्च स्वयममनस्कमश्रोत्रमपाणिपादं ज्योतिर्विदितम्॥

அதாஸ்ய புருஷஸ்ய சத்வாரி ஸ்தாநாநி பவந்தி |
நாபிர்ஹ்ருதயம் கண்டம் மூர்தேதி |
தத்ர சதுஷ்பாத³ம் ப்³ரஹ்ம விபாதி |
ஜாகரிதம் ஸ்வப்நம் ஸுஷுப்தம் துரீயமிதி |

ஜாகரிதே ப்³ரஹ்மா ஸ்வப்நே விஷ்ணு: ஸுஷுப்தௌ ருத்ரஸ்துரீயமக்ஷரம் |
ஸ ஆதித்யோ விஷ்ணுஸேஸ்வரக்ஷ ஸவயம் மனஸ்கம ஸ்தோத்ரமபாணி பாடம் ஜ்யோதிர்விதிதம் ||

athāsya puruṣasya chatvāri sthānāni bhavanti।

nābhirhṛdayaṃ kaṇṭhaṃ mūrdheti । tatra catuṣpādaṃ

brahma vibhāti ।jāgaritaṃ svapna suṣuptaṃ turīyamiti।

jāgarite brahmā svapne viṣṇuḥ suṣuptau rudrasturīya-makṣaram । sa ādityo viṣṇuśeśvaraśca svayamamanaskamaśrotramapāṇipādaṃ jyotirviditam॥

<u>ஸ்லோக விளக்கம்:-</u>

மனித உடலில் உறையும் அந்த புருஷனுக்கு நான்கு முக்கியமான இடங்கள் உள்ளன. அவைகள் **தொப்புள், இதயம், கழுத்து, மற்றும்** தலை உச்சி ஆகும்.

அதில் நான்கு சக்திகளைக் கொண்டதாக அந்த பிரம்மம் பிரகாசிக்கிறது.

அந்த வகையில், விழிப்பில் நான்முக பிரம்மா எனவும், கனவில் விஷ்ணு எனவும், உறக்கத்தில் ருத்ரன் எனவும் ஆகி, அதற்கு அப்பால் நான்காவது நிலையான துரியத்தில் அக்ஷர பிரம்மமாக உள்ளது.

அந்தப் பரம புருஷனே சூரியனும், எங்கும் வியாபித்த விஷ்ணுவாக, இந்த உலகை இரக்ஷிக்கும் ஈஸ்வரனாக அந்தப் பரம புருஷன், மனதில்லாமல் நினைப்பவனாகவும், காது இல்லாமல் கேட்பவனாகவும், கை, கால்கள் இல்லாமல் செயல் புரிபவனாகவும், தன்னில் தானாய் சுவயம் ஜோதி ஸ்வரூபமாக தன்னை வெளிப்படுத்திக் கொள்கின்றது.

ஸ்லோகம் - 2

यत्र लोका न लोका देवा न देवा वेदा न वेदा यज्ञा न यज्ञा माता ने माता पिता न पिता स्नुषा न स्नुषा चाण्डालो न चाण्डालः

पौल्कसो न पौल्कसः श्रमणो न श्रमणः तापसो न तापस इत्येकमेव परं ब्रह्म विभाति निर्वाणम्॥

யத்ர லோகா ந லோகா தேவா ந தேவா வேதா ந தேவா யக்ஞா நா யக்ஞா மாதா நே மாதா பிதா ந பிதா ஸ்நுஷா ந ஸ்நுஷா சாண்டாலோ ந சாண்டால: பௌல்கஸோ ந பௌல்கஸ: ஸ்ரமணோ ந ஸ்ரமணா: தாபஸோ ந தாபஸ: இத்யேகமேவ பரம் ப்ரஹ்ம விபாதி நிர்வாணம் ||

yatra lokā na lokā devā na devā vedā na vedā yajñā na yajñā mātā ne mātā pitā na pitā snuṣā na snuṣā cāṇḍālo na cāṇḍālaḥ paulkaso na paulkasaḥ śramaṇo na śramaṇaḥ tāpaso na tāpasa ityekameva paraṃ brahma vibhāti nirvāṇam ||

ஸ்லோக விளக்கம்:-

எங்கு உலகம் உலகமாக இல்லையோ, தேவர்கள் தேவர்களாக இல்லையோ, யக்ஞங்கள் யக்ஞங்களாக இல்லையோ, தந்தை தந்தையாக இல்லையோ, தாய் தாயாக இல்லையோ, சண்டாளன் சண்டாளனாக இல்லையோ அரசன் அரசனாக இல்லையோ, துறவி துறவியாக இல்லையோ, தவசி தவசியாக இல்லையோ, அங்கே எல்லாம் ஒன்றேயான அந்த பரப்பிரம்மமே முழு நிர்வாண நிலையில் விளங்குகின்றது.

அதாவது, நிர்வாணம் என்பது ஒன்றுமில்லாத சூன்யமான நிலையில் அந்த அறிவு தன்னில் தானாய் பிரகாசித்துக் கொண்டு விளங்கிக் கொண்டிருப்பது ஆகும்.

ஸ்லோகம் - 3

न तत्र देवा ऋषयः पितर ईशते प्रतिबुद्धः सर्वविद्येति ॥

ந தத்ர தேவா ருஷ்ய: பிதர ஈசதே பிரதிபுத்த: ஸர்வவித்யேதி ||

na tatra devā ṛṣayaḥ pitara īśate pratibuddhaḥ sarvavidyeti ||

ஸ்லோக விளக்கம்:-

அங்கே தேவர்களும், ரிஷிகளும், பித்ருக்களும் கிடையாது. தன் மனதை விசாரித்து, இந்த உலக விவகாரங்களில் இருந்து விழித்துக் கொண்ட ஞானி வல்லமையுடன் எல்லாமாக விளங்குகிறான். அவனே எல்லாம் அறிந்தவன்.

ஸ்லோகம் - 4

हृदिस्था देवताः सर्वा हृदि प्राणा: प्रतिष्ठिताः।
हृदि प्राणश्च ज्योतिश्च त्रिवृत्सूत्रं च तद्विदुः ।
हृदि चैतन्ये तिष्ठति ॥

ஹ்ருதிஸ்தா தேவதா: ஸர்வா ஹ்ருதி ப்ராணா: ப்ரதிஷ்டிதா: |
ஹ்ருதி ப்ராணச்ச ஜ்யோதிச்ச த்ரிவ்ரத்ஸூத்ரம் ச தத்விது: |
ஹ்ரிதி சைதன்யே திஷ்டதி ||

hṛdisthā devatāḥ sarvā hṛdi prāṇā: pratiṣṭhitāḥ।
hṛdi prāṇaśca jyotiśca trivṛtsūtraṃ ca tadviduḥ ।
hṛdi chaitanye tiṣṭhati ॥

ஸ்லோக விளக்கம்:-

மனித உடல் இயங்குவதற்கான ஆதார தேவதைகள் எல்லோரும் ஹ்ருதயத்தில் உள்ளார்கள். அனைத்து பிராணன்களும் ஹ்ருதயத்தில் நிலை பெறுகின்றன.

ஹ்ருதயத்தின் மூலம்தான் உயிர்நிலையும், ஞான ஒளியும் பிரகாசிக்கின்றது.

அந்த அறிவுப் பிரகாசம்தான் முப்புரிநூல் என்கின்ற பூணூல் என்று ஞானிகள் அறிகிறார்கள். அந்த பரமாத்மா ஹிருதயத்தில் சைதன்யமாகவும், பிராணனாகவும், அறிவாகவும் (ஆன்மாவாகவும்) உறைகிறது.

ஸ்லோகம் - 5

यज्ञोपवीतं परमं पवित्रं प्रजापतेर्यत्सहजं पुरस्तात्।
आयुष्यमग्रयं प्रतिमुञ्च शुभ्रं यज्ञोपवीतं बलमस्तु तेजः ॥

யஜ்ஞோபவீதம் பரமம் பவித்ரம் ப்ரஜாபதேர்யத் ஸஹஜம் புரஸ்தாத் |
ஆயுஷ்யமக்ரயம் ப்ரதிமுஞ்ச சுப்ரம் யஜ்ஞோபவீதம் பலமஸ்து தேஜ: ||

yajñopavītaṃ paramaṃ pavitraṃ prajāpateryatsahajaṃ purastāt|
āyuṣyamagrayaṃ pratimuñca śubhraṃ yajñopavītaṃ balamastu tejaḥ ||

ஸ்லோக விளக்கம்:-

பரிசுத்தமான, மிகச் சிறந்ததுமான, அந்த பூணூல் என்ற அறிவுப் பிரகாசத்துடன் ஆதியில் தோன்றும் பொழுதே பிரம்மா விளங்கினார். அவருடன் தோன்றிய அந்த அறிவுப் பிரகாசமான பரிசுத்தமான வெண்மையான பூணூல் ஆயுளையும், ஆரோக்கிய மேன்மையையும் அளிக்கக் கூடியதாக உள்ளது. அந்த பூணூலினால் மட்டுமே ஞான ஒளியும், பலமும் நிலைப் பெற முடியும்.

யக்ஞோபவீதம் அதாவது, புதியதாக பூணூல் தரிக்கும் போது கூற வேண்டிய மந்திரம் இது.

இதைப்பற்றி **யாக்ஞவல்கிய ஸ்மிரிதி** என்ற சாஸ்திரம், இந்த யக்ஞோபவீதத்தை **ப்ரஹ்ம ஸூத்ரம்** என்றும் அழைக்கிறது.

ஸ்லோகம் - 6

सशिखं वपनं कृत्वा बहिःसूत्रं त्यजेद्बुधः।
यदक्षरं परं ब्रह्म तत्सूत्रमिति धारयेत् ॥

**சசிகம் வபநம் க்ருத்வா பஹி: ஸூத்ரம் த்யஜேத்புத: |
யதக்ஷரம் பரம் ப்ரஹ்ம தத்ஸூத்ரமிதி தாரயேத். ||**

saśikhaṃ vapanaṃ kṛtvā bahiḥsūtraṃ tyajedbudhaḥ |
yadakṣaraṃ paraṃ brahma tatsūtramiti dhārayet ||

ஸ்லோக விளக்கம்:-

குடுமியுடன் கூடிய தலைமுடியை முழுவதுமாக மழித்து, வெளியில் அணியும் பூணூலை உடலில் இருந்து நீக்கிவிட வேண்டும். அத்துடன் அந்த அகண்ட பரப்பிரம்மம் "**ஓம்**" என்ற அக்ஷர (எழுத்து) வடிவம் கொண்டதாக இருப்பதினால், அந்த பரம் ப்ரஹ்மத்தை **சூத்திரம்** எனப்பட்ட பூணூலாக புத்தியில் தரிக்க வேண்டும்.

யார் இவ்வாறு செய்ய வேண்டும் என்பதை அடுத்தடுத்த ரிக்குகளில் விளக்கப்படுகிறது.

இதை பகவத்கீதை, "**மயி ஸர்வமிதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ**" **(7.7).** அதாவது, நூலில் மணிகள் கோர்க்கப்பட்டது போன்று, பிரம்மத்திடம் உலகனைத்தும் கோர்க்கப்பட்டிருப்பதால், பிரம்மம் **ஸூத்ராத்மா** எனப்படுகிறது என்பதையும் காணலாம்.

ஸ்லோகம் - 7

सूचनात्सूत्रमित्याहुः सूत्रं नाम परं पदम्।
तत्सूत्रं विदितं येन स विप्रो वेदपारगः ॥

ஸூசனாத்ஸூத்ரமித்யாஹு: ஸூத்ரம் நாம பரம் பதம்|
தத்ஸூத்ரம் விதிதம் யேன ஸ விப்ரோ வேதபாரக: ||

Sūcanātsūtramityāhuḥ sūtraṃ nāma paraṃ padam।

tatsūtraṃ viditaṃ yena sa vipro vedapāragaḥ ॥

ஸ்லோக விளக்கம்:-

ஸூசனை செய்வதால் அதாவது, சுட்டிக் காட்டுவதால், அதை **ஸூத்ரம்** (பூணூல்) என்று அழைக்கப்படுகின்றது

ஸூத்ரம் என்று குறிப்பிடுவது ஒப்புயர்வற்ற அந்த பரம பதத்தை மட்டுமே ஆகும். அந்த ஸூத்ரம் எவனால் அறியப்படுகிறதோ, அறிவால் அணியப்படுகிறதோ, அவனே வேதத்தில் கரை கண்ட **விப்ரன்** என்னும் ப்ராஹ்மணன் ஆவான்.

ஸ்லோகம் - 8

येन सर्वमिदं प्रोतं सूत्रे मणिगणा इव।
तत्सूत्रं धारयेद्योगी योगवित्ततत्त्वदर्शिवान्॥

யேந ஸர்வமிதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ | தத்ஸூத்ரம் தாரயேத்யோகீ யோகவித் தத்வ தர்ஷிவான் ||

Yena sarvamidaṃ protaṃ sūtre maṇigaṇā iva |
tatsūtraṃ dhārayedyogī yogavittattvadarśivān ||

ஸ்லோக விளக்கம்:-

ஒரு சரட்டில் (ஒரு கயிற்றில்) மணிகள் எவ்வாறு ஒன்றாக கோர்த்து மாலையாக கட்டப்பட்டுள்ளதோ, அவ்வாறே, இந்த சரட்டை (பூணூலை) ப்ரஹ்ம சூத்திரமாக அறிந்து, அந்த அறிவே அனைத்திலும் தன்னில் தானாய் பிரகாசிக்கின்றது என்று உணர்ந்து கொண்டவனுமான ஞானி அந்த ப்ரஹ்மத்தையே தனது பூணூலாக தரித்து கொள்ளக்கூடிய **தத்வ தரிசனம்** உடையவனாக இருக்கின்றான்.

ஸ்லோகம் - 9

बहिःसूत्रं त्यजेद्विद्वान्योगमुत्तममास्थितः।
ब्रह्मभावमिदं सूत्रं धारयेद्यः स चेतनः।
धारणात्तस्य सूत्रस्य नोच्छिष्टो नाशुचिर्भवेत् ॥

**பஹி: ஸூத்ரம் த்யஜேத்வித்வான் யோகமுத்தம-
மாஸ்த்தித: |
ப்ரம்ம பாவமிதம் ஸூத்ரம் தாரயேத்ய: ஸ சேதன: |
தாரணாத்தஸ்ய ஸூத்ரஸ்ய நோச்சிஷ்டோ
நாஸூசிர்பவேத் ||**

bahiḥsūtraṃ tyajedvidvānyogamuttamamāsthitaḥ।
brahmabhāvamidaṃ sūtraṃ dhārayedyaḥ sa cetanaḥ।
dhāraṇāttasya sūtrasya nocchiṣṭo nāśucirbhavet ||

ஸ்லோக விளக்கம்:-

இத்தகைய சிறந்த யோகத்தில் நிலைபெற்ற ஞானியானவன் வெளிப்படையான நூலால் ஆன பூணூலை விட்டுவிட வேண்டும். பிரம்ம பாவனையாக அறிவு ஸூத்திரத்தை (பூணூலை) எவன் தரிக்கிறானோ அவன்தான் அறிவாளி.

ஸ்லோகம் - 10

सूत्रमन्तर्गतं येषां ज्ञानयज्ञोपवीतिनाम्।
ते वै सूत्रविदो लोके ते च यज्ञोपवीतिनः ॥

ஸூத்ரமந்தர்க்கதம் யேஷாம் ஜ்ஞானயஜ்ஞோபவீதினாம் |
தே வை ஸூத்ரவிதோ லோகே தே ச யஜ்ஞோபவீதின: ||

sūtramantargataṃ yeṣāṃ jñānayajñopavītinām| te vai sūtravido loke te ca yajñopavītinaḥ ||

ஸ்லோக விளக்கம்:-

அந்த அறிவு ஸூத்திரத்தை அணிந்தால், அது எச்சிலாகவோ, அசுத்தமாகவோ ஆகாது. அந்த ஞானப் பூணூல் அணிந்த எவர்களுடைய அறிவு சூத்திரம் உள்ளே போய் விட்டதோ, அவர்களே உலகில் ஸூத்திரத்தின் ரகசியத்தை உணர்ந்தவர்கள் ஆகின்றார்கள். அவர்களே உலகில் உண்மையாகவே பூணூல் அணிந்த ப்ராஹ்மணர்கள் எனப்படுகின்றார்கள்.

ஸ்லோகம் - 11

ज्ञानशिखिनो ज्ञाननिष्ठा ज्ञानयज्ञोपवीतिनः ।
ज्ञानमेव परं तेषां पवित्रं ज्ञानमुच्यते ॥

ஜ்ஞானசிகினோ ஜ்ஞானநிஷ்டா ஜ்ஞானயஜ்ஞோபவீதின: |
ஜ்ஞானமேவ பரம் தேஷாம் பவித்ரம் ஜ்ஞானமுச்யதே ||

jñānaśikhino jñānaniṣṭhā jñānayajñopavītinaḥ ।
jñānameva paraṃ teṣāṃ pavitraṃ jñānamucyate ॥

ஸ்லோக விளக்கம்:-

ஞானமே தலைமுடியாகவும், அந்த ஞான நிஷ்டையே பூணூலாகவும், உடையவர்கள் அந்த பரம ஞானத்தில் நிலை பெற்றவர்கள்.

அவர்களுக்கு ஞானத்தை விட மிக உயர்ந்தது ஒன்றுமில்லை. ஞானம் மட்டும்தான் புனிதத்தன்மை அளிப்பதாக உள்ளது.

ஸ்லோகம் - 12

अग्नेरिव शिखा नान्या यस्य ज्ञानमयी शिखा।
स शिखीत्युच्यते विद्वान्नेतरे केशधारिणः ॥

அக்னேரிவ சிகா நான்யா யஸ்ய ஜ்ஞானமயீ சிகா |
ஸ சிகீத்யுச்யதே வித்வான்நேதரே கேசதாரிண: ||

Agneriva śikhā nānyā yasya jñānamayī śikhā। sa śikhītyucyate vidvānnetare keśadhāriṇaḥ ॥

<u>ஸ்லோக விளக்கம்:-</u>

அந்த அறிவை அறிந்துக் கொண்ட ஞானியின் ஞானமே (அறிவே) தலைமுடி எனப்படுகின்றது. அவைகள் அல்லாது மற்ற சாதாரண தலைமுடிகள் எல்லாம் உண்மையிலேயே முடியாகக் கருதப்படாது.

அதாவது, எவனுடைய சிகைகள் (முடிகள்) ஞான மயமானதோ, அந்த அறிவாளியே சிகை உடையவனாக உள்ளான். மற்றவர்கள் எவ்வளவுதான் தலை நிறைய சிகைகள் (முடிகள்) உடையவர்களாக இருந்தாலும் அவர்கள் உண்மையில் தலை மயிர்கள் கொண்டவர்கள் அல்ல.

<u>ஸ்லோகம் - 13</u>

कर्मण्यधिकृता ये तु वैदिके ब्राह्मणादयः।
तैः संधार्यमिदं सूत्रं क्रियाङ्गं तद्धि वै स्मृतम् ॥

கர்மண்யதிக்ருதா யே து வைதிகே ப்ராஹ்மணாதய: | தை: சம்தார்யமிதம் ஸூத்ரம் க்ரியாங்கம் தத்தி வை ஸ்ம்ருதம் ||

karmaṇyadhikṛtā ye tu vaidike brāhmaṇādayaḥ I taiḥ saṃdhāryamidaṃ sūtraṃ kriyāṅgaṃ taddhi vai smṛtam ||

ஸ்லோக விளக்கம்:-

வைதீக கர்மங்களைச் செய்யக்கூடிய அதிகாரம் கொண்ட அறிவாளிகளான பிராமணர்கள் உண்மையில் அந்த ஏக அறிவை, அறிவாக உணர்ந்துக் கொண்ட நிலையில், அதையே தமது கர்ம காரியத்திற்கு அங்கமாகக் கொண்டு, அந்த ப்ரஹ்ம சூத்திரத்தையே பூணூலாக அணியப்பட வேண்டும் என்பதுதான் தர்ம சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள நியதி.

ஸ்லோகம் - 14

शिखा ज्ञानमयी यस्य उपवीतं च तन्मयम्।
ब्राह्मण्यं सकलं तस्य इति ब्रह्मविदो विदुः ||

சிகா ஜ்ஞானமயீ யஸ்ய உபவீதம் ச தன்மயம் |
ப்ராஹ்மண்யம் ஸகலம் தஸ்ய இதி ப்ரஹ்மவிதோ விது: ||

śikhā jñānamayī yasya upavītaṃ ca tanmayam।

brāhmaṇyaṃ sakalaṃ tasya iti brahmavido viduḥ ॥

<u>ஸ்லோக விளக்கம்:-</u>

எவனுடைய தலைமுடி ஞானமயமானதோ, அவனுடைய பூணூலும் ஞான மயமானதே, அவனுக்கு மட்டுமே பிராமணத்துவம் முழுவதுமாக சித்திக்கும் என்று வேதத்தை அறிந்தவர்கள் உணர்ந்துள்ளார்கள்.

<u>ஸ்லோகம் - **15**</u>

इदं यज्ञोपवीतं तु पवित्रं यत्परायणम्।
स विद्वान्यज्ञोपवीती स्यात्स यज्ञः तं यज्वानं विदुः ॥

இதம் யஜ்ஞோபவீதம் து பவித்ரம் யத்பராயணம் |
ஸ வித்வான்யஜ்ஞோபவீதீ ஸ்யாத்ச யஜ்ஞ: தம்
யஜ்வானம் விது: ||

idaṃ yajñopavītaṃ tu pavitraṃ yatparāyaṇam।
sa vidvānyajñopavītī syātsa yajñaḥ taṃ yajvānaṃ viduḥ ॥

<u>ஸ்லோக விளக்கம்:-</u>

இந்த பூணூலே மிகச் சிறந்ததும், நாடி அடையத் தக்கதும் ஆகும்.

அதை அறிந்தவனே யஜ்ஞோயோபவீதம் (பூணூல்) அணிந்தவன் ஆகின்றான். அவனே யஜ்ஞமும், யஜ்ஞம் செய்பவனும் ஆவான் என்பதை அந்த அறிவை அறிந்த, அறிஞர் பெருமக்கள் உணர்ந்துள்ளார்கள்.

<u>ஸ்லோகம் - 16</u>

एको देवः सर्वभूतेषु गूढः सर्वव्यापी सर्वभूतान्तरात्मा। कर्माध्यक्षः सर्वभूताधिवासः साक्षी चेता केवलो निर्गुणश्च ॥

ஏகோ தேவ: ஸர்வபூதேஷு கூட: ஸர்வவியாபீ ஸர்வபூதாந்தராத்மா |

கர்மாத்யக்ஷ: ஸர்வபூதாபதிவாச: ஸாக்ஷி
சேதா கேவலோ நிர்குணஸ்ச ||

eko devaḥ sarvabhūteṣu gūḍhaḥ sarvavyāpī sarvabhūtāntarātmā ׀

karmādhyakṣaḥ sarvabhūtādhivāsaḥ sākṣī cetā kevalo nirguṇaśca ||

ஸ்லோக விளக்கம்:-

இறைவன் ஒருவரே! உள்ளார். அவர் மட்டுமே எல்லா உயிர்களுக்கு உள்ளும், புறமும் என எங்கும், எதிலும் நீக்கமற நிறைந்துள்ளார்.

அவரே எல்லா உயிரினங்களுக்கு உள்ளேயும் அந்தராத்மாவாக இருப்பு கொண்டு, அவைகள் செய்கின்ற எல்லாக் காரியங்களையும் சாக்ஷி மாத்திரமாக இருந்துக் கொண்டு, வேடிக்கைப் பார்த்துக் கொண்டுள்ளார்.

அவரே சாட்சியாய் இருப்பதும், அனைத்தையும் அறியக்கூடிய அறிவாய் இருப்பதும், தன்னில் தானாய் விளங்குவதும் என எல்லாக் குணங்களையும் கடந்த குணாதீதனாக அவரே உள்ளார்.

ஸ்லோகம் - 17

एको वशी सर्वभूतान्तरात्मा एकं रूपं बहुधा यः करोति । तमात्मस्थं येऽनुपश्यन्ति धीरास्तेषां शांतिः शाश्वती नेतरेषाम् ॥

ஏகோ வாசி ஸர்வபூதாந்தராத்மா ஏகம் ரூபம் பஹுதா ய: கரோதி |
தமாத்மஸ்தம் யேனுபச்யந்தி தீராஸ்தேஷாம் ஸாம்தி: சாஸ்வதி நேதரேஷாம். ||

eko vaśī sarvabhūtāntarātmā ekaṃ rūpaṃ bahudhā yaḥ karoti । tamātmasthaṃ ye'nupaśyanti dhīrāsteṣāṃ śāṃtiḥ śāśvatī netareṣām ॥

ஸ்லோக விளக்கம்:-

எல்லா உயிர்களுக்கும் அந்தராத்மாவாகவும், அவைகள் அனைத்தையுமே தன் வசத்தில் வைத்துக் கொண்டிருப்பவராகவும் உள்ள அவரே, அவைகள் அனைத்தையும் பலவாறாக தன்னில் தானாய் சிருஷ்டி செய்துக்கொண்டு, அவைகளை தன்னிடமே இருப்பதாக எவர் தொடர்ந்து காண்கிறார்களோ, அவர்களுக்கே அழியாத அந்த இருப்பின் சுகம் உண்டாகின்றது. மற்றவர்களுக்கு அத்தகைய சுகம் கிடையாது.

ஸ்லோகம் - 18

आत्मानमरणिं कृत्वा प्रणवं चोत्तरारणिम्।
ध्याननिर्मथनाभ्यासद्देवं पश्येन्निगूढवत् ॥

ஆத்மானமரணிம் க்ரித்வா ப்ரணவம் சோத்தராரணிம் |
த்யான நிர்மதனா ப்யாஸத்தேவம் பச்யேந்நிகூடவத் ||

ātmānamaraṇiṃ kṛtvā praṇavaṃ chottarāraṇim।
dhyānanirmathanābhyāsaddevaṃ paśyennigūḍhavat ॥

ஸ்லோக விளக்கம்:-

ஆன்மாவை கீழ் அரணியாகவும், ப்ரணவம் எனும் ஓங்காரத்தை மேல் அரணியாகவும் கொண்டு, தியானமாகிய கடைதலை தொடர் அப்பியாசம் செய்தால், அந்த அரணிக்கட்டையில் மறைந்திருந்த அக்னி வெளிப்பட்டு காணப்படுவதுப் போன்று, அந்த அறிவுப் பொருளாகிய பரமான்மாவை, தமது அறிவுப் பிரகாசமாகவே வெளிப்படுத்திக் காண முடியும்.

<u>ஸ்லோகம் - 19</u>

तिलेषु तैलं दधनीव सर्पिरापः स्त्रोतः स्वरणीषु चाग्निः ।
एवमात्मात्मनि गृह्यतेऽसौ सत्येनैनं तपसा योऽनुपश्यति ॥

திலேஷு தைலம் ததனீவ ஸர்ப்பிராப: ஸ்த்ரோத: ஸ்வரணீஷு சாக்னி: |
ஏவமாத்மாத்மனி க்ருஹ்யதேSஸெள ஸத்யேனைனம் தபஸா யோSனுபச்யதி ||

tileṣu tailaṃ dadhanīva sarpirāpaḥ strotaḥ svaraṇīṣu cāgniḥ ।
evamātmātmani gṛhyate'sau satyenainaṃ tapasā yo'nupaśyati ॥

<u>ஸ்லோக விளக்கம்:-</u>

எள்ளில் மறைந்திருக்கும் எண்ணெயைப் போலவும், தயிரில் மறைந்திருக்கும் வெண்ணெயைப் போலவும், அரணிக்கட்டையில் மறைந்திருக்கும் நெருப்பைப் போலவும், ஒருவன் சத்தியத்தினை நழுவ விடாமல், தவமாகக் கொண்டானென்றால், அவனிடம் மறைந்திருக்கும் அந்த ஆன்ம பிரகாசத்தை அவன் உள்ளத்தில் தொடர்ந்துப் பார்க்க முடியும்.

உடல் தூய்மை நீரால் அமையும் -
மனத்தூய்மை வாய்மையால் காணப்படும். - திருக்குறள்

<u>ஸ்லோகம் - 20</u>

ऊर्णनाभिर्यथा तन्तून्सृजते संहरत्यपि।
जाग्रत्स्वप्ने तथा जीवो गच्छत्यागच्छते पुनः॥

ஊர்ணநாபிர்யதா தந்தூன்ஸ்ருஜதே ஸம்ஹரத்யபி |
ஜாக்ரத் ஸ்வப்நே ததா ஜீவோ கச்சத்யாகச்சதே புன: ||

ūrṇanābhiryathā tantūnsṛjate saṃharatyapi।
jāgratsvapne tathā jīvo gacchatyāgacchate punaḥ॥

<u>ஸ்லோக விளக்கம்:-</u>

ஒரு சிலந்திப்பூச்சி எவ்வாறு தன்னிடமிருந்து தனக்குத் தேவையான நூலை உண்டாக்கி, மீண்டும் அந்த நூலை தனக்குள்ளேயே இழுத்துக் கொள்கிறதோ அதுப்போன்றே, ஜீவன் (மனம்) தனது விழிப்பிலும், கனவிலும் தனக்குத் தேவையான உலகத்தை உண்டாக்கி, மீண்டும் அந்த உலகத்தை தன்னுடைய ஆழ்ந்த உறக்கத்தில் (இறப்பில்) தன்னுள்ளேயே இழுத்துக் கொள்கின்றான்.

ஸ்லோகம் - 21

नेत्रस्थं जागरितं विद्यात्कण्ठे स्वप्न समाविशेत्।
सुषुप्तं हृदयस्थं तु तुरीयं मूर्ध्नि संस्थितम्॥

நேத்ரஸ்த்தம் ஜாகரிதம் வித்யாத்கண்டே ஸ்வப்ன ஸமாவிசேத் |

ஸுஷுப்தம் ஹ்ருதயஸ்த்தம் து துரீயம் மூர்த்னி ஸம்ஸ்த்திதம் ||

netrasthaṃ jāgaritaṃ vidyātkaṇṭhe svapna samāviśet|
suṣuptaṃ hṛdayasthaṃ tu turīyaṃ mūrdhni saṃsthitam||

ஸ்லோக விளக்கம்:-

ஜீவன் (மனம்) ஜாக்ரத்தில், அதாவது விழிப்பு நிலையில் கண்ணில் இருப்பதாகவும், ஸ்வப்னத்தில் (கனவில்) கழுத்தில் உறைவதாகவும், ஆழ்ந்த உறக்கத்தில் ஹிருதயத்தில் ஒடுங்கி இருப்பதாகவும், அதுவே, துரீயத்தில் தலை உச்சியில் நிலைக் கொண்டு இருக்கின்றது.

ஸ்லோகம் - 22

यतो वाचो निवर्तन्ते अप्राप्य मनसा सह।
आनन्दमेतज्जीवस्य यं ज्ञात्वा मुच्यते बुधः ॥

யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ |
ஆனந்தமேதஜ்ஜீவஸ்ய யம் ஜ்ஞாத்வா முச்யதே புத: ||

yato vāco nivartante aprāpya manasā saha।
ānandametajjīvasya yaṃ jñātvā mucyate budhaḥ ॥

ஸ்லோக விளக்கம்:-

எந்த நிலையை எட்டிப் பிடிக்க முடியாமல் மனதுடன் வாக்கும் திரும்பி விடுகிறதோ, அதுதான் ஜீவனுடைய (மனதினுடைய) பரிபூரண ஆனந்த நிலை எனலாம். இதை உணர்ந்த புத்திமான் முக்தனாகிறான்.

ஸ்லோகம் - 23

सर्वव्यापिनमात्मानं क्षीरे सर्पिरिवान्वितम्।
आत्मविद्यातपोमूलं तद्ब्रह्मोपनिषत्पदं तद्ब्रह्मोपनिषत्पदमिति
॥

ஸர்வவ்யாபினமாத்மானம் க்ஷீரே ஸர்ப்பிரிவாந்விதம் |
ஆத்மவித்யாதபோமூலம் தத்ப்ரஹ்மோபநிஷத் பதம்
தத் ப்ரஹ்மோபநிஷத் பதமிதி ||

sarvavyāpinamātmānaṃ kṣīre sarpirivānvitam|
ātmavidyātapomūlaṃ tadbrahmopaniṣatpadaṃ
tadbrahmopaniṣatpadamiti ||

ஸ்லோக விளக்கம்:-

பாலில் வெண்ணை மறைந்து இருப்பதுப் போன்று, எங்கும் வியாபித்திருக்கும் ஆன்மாவை ஞானத்தாலும், தவத்தாலும் மட்டுமே அறிய முடியும்.

இது மட்டும்தான் ப்ரஹ்மோபநிஷம் வாயிலாக அடைய வேண்டிய பதம் எனலாம்.

இதி ப்ரஹ்மோபநிஷத் ஸம்பூர்ணம்.

நிறைவுற்றது!

ப்ரஹ்மோபநிஷதம்

<u>விளக்க உரை</u>

பரப்பிரஹ்மத்தின் பிரதிபிம்ப வெளிப்பாடான தெய்வீக ஆற்றல் (சக்தி) இந்த மொத்த பிரபஞ்சமாக வெளிப்பட்டுள்ளது. அவ்வாறு படைக்கப்பட்ட இந்த மொத்த பிரபஞ்சத்தில் அந்த இறை ஆற்றல் இருப்பு கொண்டுள்ள மனிதனிடம், அவனது விழிப்பு நிலையில் பிரம்மாவாகவும், கனவு நிலையில் விஷ்ணுவாகவும், அவனது ஆழ்ந்த உறக்க நிலையில் ருத்ரனாகவும் என மூன்று முக்கிய சக்திகளாக வெளிப்பட்டு, அவனது மனதின் வாயிலாக **படைத்தல், காத்தல், அழித்தல்** என்ற முத்தொழிலை புரிவதாகவும் உள்ளது.

அந்த வகையிலே இந்த முத்தொழிலைப் புரிகின்ற **ஈஸ்வரன்** ஆகவும் மனித மனமே உள்ளது. என்பதினால், அதை "**மகா மாயை**" என்று சாஸ்திரம் உறைக்கின்றது.

புராணங்களின் வாயிலாக உபதேசிக்க வந்த மகரிஷிகள் மனிதனுக்கு கொடுக்கப்பட்ட பகுத்தறிவு சக்தியானது அந்த மாயையின் வெளிப்பாடு என்பதினால், அதைப் பெண் தெய்வமாக

உருவகப்படுத்தி, ஆண் தெய்வமாகிய சிவத்துடன் (ப்ரஹ்மத்துடன்) அந்த சக்தி ஒடுங்கி ஒன்றாய் இருப்பதை அர்த்தநாரீஸ்வர தத்துவமாக எடுத்துக் கூறினர். அதாவது, பாதி ஆண், பாதி பெண் என்பதாக இந்த பிரபஞ்ச உற்பத்தியைப் பற்றி விளக்கமளித்தனர்.

அத்தகைய, இந்த “**நான் இந்த பிரபஞ்சத்தில் இருப்பதைப் போன்று, பிரபஞ்சம் என்னுள் இருக்கிறது**” என்ற எளிய உண்மையை அனைவரும் அறியும் பொருட்டு, மனிதனின் மூன்று அவஸ்தைகளான விழிப்பு, கனவு மற்றும் ஆழ்ந்த உறக்கம் என்பதை அவனது அன்றாட அனுபவமாக வெளிப்படுவதை சுட்டிக் காட்டி, அதனை அறிவிக்கும் விதமாக, ஸூசனை என்ற சமஸ்க்ருத வார்த்தையிம் பொருள்படி, ஸூத்திரம் அணிகின்ற பூணூல் அணியும் புறச் சடங்கை சம்பிரதாயமாக நமது இந்து தர்மத்தில் ஏற்படுத்தினர்.

ஆனால், அந்த சூத்திரம் (பூணூல்) அணிவது என்பது சாக்ஷாத் ப்ரஹ்மானுபவம் என்பதை அறியாத மூடர்கள் அதை பன்றிக்கும், பக்ஷிக்கும், ஏன்? மனிதனுக்கும் அணிந்து அழகு பார்க்கின்றனரே தவிர, ஒருவரும் அதன் உண்மைப் பொருளை அறிந்தார்கள் இல்லை. இதைப் பற்றி எடுத்துக் கூற வந்த உன்னத உபநிஷதங்களின் வரிசையில் இந்த **ப்ரஹ்மோபநிஷதம்** முக்கிய பங்கு வகிக்கின்றது.

மனிதனின் மூன்று அவஸ்தைகளான **விழிப்பு நிலை, கனவு நிலை** மற்றும் **ஆழ்ந்த உறக்க நிலை** அனுபவங்களுக்கு அப்பாற்பட்ட, மற்றும் மனித உடலுக்கு உட்பட்ட மூலாதாரம் முதல் சகஸ்ரஹாரம் என்ற சக்கரங்களுக்கு உட்படாத, உடலைக் கடந்த உயரிய நிலையான துரியாதீத நிலையில், பரவெளியில் உண்மையில் பரப்பிரம்மாவாகவே இவன் இருப்பு கொண்டுள்ளான் என்பதை இந்த உபநிஷதம் எளிதாக எடுத்து விளக்குகின்றது.

அந்த பரப்பிரம்மமான அகண்டசக்தி மனித வடிவத்திற்கு அப்பாற்பட்டு, குணங்கள் ஏதுமற்று, ஏக சக்தியாக, எல்லையில்லாமல் எங்கும், எதிலும் பரவிக் காணப்படுகின்றது. அதை மனிதன் தன் உள்ளுணர்வால் அறிவுப் பிரகாசமாக அறிந்துக் கொள்ள முடியும் என்றும், அதுவே சூரியனாகவும், விண்மீன்களாகவும், அத்துடன் சந்திரன் முதலான கோள்களாகவும், எங்கும், எதிலும் எல்லையற்று வியாபித்திருக்கும், இந்த பூமிப் பந்தில் ஒரு அறிவு தாவரம் முதல் ஆறு அறிவு மனிதன் வரை அறிவாகப் பிரதி பிம்பித்து பிரகாசித்துக் கொண்டுள்ளது என்றும், அதனால், அதை மாயா ஈஸ்வரனாகவும், மொத்த பிரபஞ்சமாகவும் பாவிக்க வேண்டும் என்று கூறப்படுகின்றது.

இதிலே, மனிதன் அறிய வேண்டிய ஒன்றுமற்ற சூன்யமான நிர்வாண நிலை என்பது, சாக்ஷாத் அந்த பரப்பிரம்மாகவே விளங்கும் எல்லையில்லா பேரறிவின்

உன்னத நிலையான ஏழாம் அறிவுப் பரிமாணத்திற்குள், குணங்கள் ஏதுமற்ற குணாதீத நிலையில், உணர்ந்துக் கொள்ளவும் முடியும் என்று கூறப்படுகின்றது.

பொதுவாக, நிர்குண ப்ரஹ்மமாகிய அந்த ஏக வஸ்து, அகண்ட அறிவுப் பொருளாக இருப்பினும், அந்த அறிவின் வெளிப்பாடான அதன் ஆற்றல், ஒரு அறிவு படைத்த தாவரங்கள் முதற்கொண்டு, ஆறறிவு படைத்த மனிதன் வரை தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருப்பதால், அது அனைத்து உயிரினங்களின் உடல்களிலும் அந்தர்யாமியாக ஹிருதயத்தில் இருப்பு கொண்டுள்ளது என்கின்றது இந்த உபநிஷதம்.

அந்த வகையிலே மகத்தான மனித உடலின் ஹிருதயத்தில் அதன் இருப்பு மையம் கொண்டுள்ளது என்பதினால், மனித உடலின் இயக்கத்திற்கு அதாரமான ஆதார ஸ்தலங்களில் தெய்வீக ஆற்றல்களாக பரவி இருக்கின்றது.

இந்த தெய்வீக ஆற்றல் உடல்களில் ஒவ்வொரு அணுக்களிலும் அணுவுக்குள் அணுவாகவும், அகண்டத்தில் அகண்டாகாரமாகவும் இருப்பதினால், மனித உடலி இயக்கத்திற்கு உள்ள உடல் உறுப்புகளுக்குத் தேவையான அணுக்களின் இயக்க சக்தியாகவும் தன்னை வெளிப்படுத்திக் கொள்கின்றது.

அந்த வகையிலே, இந்த ஸ்தூல உடல் போஷிப்பதற்கும், வளர்வதற்கும் ஆதாரமாக இருந்த அதன் ஆற்றல் ஆகாரங்களின் வாயிலாக அன்னமய கோஷமாகிய இந்த ஸ்தூல உடலை வடிவமைக்கின்றது.

அத்தகைய அந்த மனித உடலில் உள்ள எலும்புகள், உடல் தசைகள், மஜ்ஜைகள், நரம்புகள், ரத்த நாளங்கள் என சப்த தாதுக்களும் உண்டாவதற்குத் தேவையான உன்னத ஆற்றலை, உண்ணும் உணவைக் கொண்டு உண்டாக்கக் கூடிய வல்லமைக் கொண்ட அந்த மகா சக்தியானது, ஏக சக்தியாக எங்கும் இருப்பதினால்தான் இந்த ஸ்தூல மனித உடல் இயங்க முடிகின்றது என்பது அறியப்படுகின்றது.

பொதுவாக மனிதன் தன்னைப் பற்றிய ஒரு தெளிந்த அறிவை அறிய வேண்டி, அனேக ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களில் இருந்து அனைத்தையும் அறிந்துக் கொள்கின்றான்.

அவ்வாறு மனிதன் ஏற்றி வைத்துக் கொண்ட அறிவை (**Knowledge)** கொண்டு, அனைத்தையும் அறிகின்றான்.

ஆனால், அந்த அறிவு உண்டாவதற்கு ஆதாரமான ஒரு **நுண்ணறிவு, உள்ளுணர்வு** அல்லது **விழிப்புணர்வு (Consiousness)** என்பதை என்று மனிதன் அனுபவமாக அறிகின்றானோ, அன்றுதான் அவன்

அந்த பேரறிவின் பெருமிதத்தை தன் உண்மை சொரூபமாக அனுபவத்தில் அறிய முடிகின்றது.

ஏற்றி வைக்கப்பட்ட அறிவுக்கும், என்றும், எப்பொழுதும் இருப்பு கொண்டுள்ள எல்லையில்லா அந்த பேரறிவுக்கும் உள்ள வித்தியாசத்தை உணர்ந்துக் கொண்டவனே அந்த உன்னத இருப்பில் இன்பமாக இருக்கின்ற "**ஞானி**" என்றும் கருதப்படுகின்றான்.

ஒரு சாதாரண மனிதனுக்கு அந்த அறிவின் ஆனந்த இருப்பை அறிய முடியாமல், ஏற்றி வைத்துக் கொண்ட ஏராளமான எண்ணங்களினால், தன் உண்மை சொரூபத்தை உணர முடியாமல், அவனது உன்னதமான உயர் திறமைகள் மறைக்கப்படுகின்றன.

ஆகையால், பல நுண்மையான விசயங்கள் மறைக்கப்பட்ட அல்லது மறக்கப்பட்ட நிலையிலேயே இருக்கின்ற சாதாரணமான மனிதர்களில் பெரும்பாலான மக்கள் தமது உடலின் அங்கங்களை அசைத்து, அரிய பல காரியங்களை செய்ய முடிகின்றது என்றால், அந்த மகத்தான ஆற்றல் மனிதனுக்கு எங்கிருந்து வந்தது, எதில் இருந்து உண்டானது என்பதை எல்லோரும் அறிய மறுக்கின்றார்கள்.

ஆனால், இதனை அறிந்த அறிஞர் பெருமக்கள் மட்டுமே அந்த அற்புத அறிவை, அகண்டாகார ஏகப்

பொருளை எளிதாக ஏற்று, இந்த உடலை ஒரு ஓடமாகப் பயன்படுத்தி, ஓயாமல் பிறவிக்கு வழி வகுக்கின்ற, பிறவிப் பெருங்கடலை எளிதில் நீந்திக் கடக்கின்றார்கள்.

பொதுவாக, இறையின் ஆற்றல் சக்தி உடல்கள் முழுவதும் பரவி இருந்தாலும், குறிப்பாக அந்த உடலில் உள்ள ஆறு ஆதார சக்கரங்களின் வாயிலாக அவைகள் உணரப்பட்டு, அந்த உடல்கள் இயங்கத் தேவையான ஆரோக்கியத்தையும், மனித மனதின் மகத்துவத்தையும் அவன் அறிய முடிகின்றது.

மனித உடலில் இருக்கின்ற ஆறு ஆதாரச் சக்கரங்களைப் பற்றிய குறிப்புக்கள் அனேக சித்தர் நூல்களில் ஏராளமாகக் காணக் கிடைக்கின்றன.

அவைகள், **மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிப்பூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை** எனும் ஆறு ஆதாரங்களைப் பற்றிய குறிப்புகள் அனேக சாஸ்திர நூல்களில் காணப்படுகின்றன.

ஆனால், இந்த **ப்ரஹ்மோபநிஷதம்** என்ற உப நிஷதம் மூலாதாரம், சுவாதிஷ்டானம் என்ற இரண்டு ஆதாரச் சக்கரங்களைத் தவிர்த்த, மற்ற பிற நான்கு ஆதாரங்களைப் பற்றிய குறிப்புகளை மிகவும் நுணுக்கமாக எடுத்துரைக்கின்றன.

பொதுவாக மூலாதாரத்தில் சித்தி, புத்திகளுடன் கூடிய விநாயகனும், சுவாதிஷ்டானத்தில் சரஸ்வதியுடன் கூடிய பிரம்மாவும், மணிப்பூரகக்தில் மகாலக்ஷிமியுடன் சேர்ந்த விஷ்ணுவும், அநாகதத்தில் தேவி ருத்ரியுடன் உள்ள ருத்ரனும், விசுத்தியில் மனோன்மணியுடன் இருக்கின்ற சதாசிவமும், ஆக்ஞையில் பராசக்தியுடன் உள்ள பரமசிவனும் என எண்ணற்ற இறை தேவதைகளைப் பற்றி அனேக சாஸ்திரங்கள் எடுத்துக் கூறினும், இவைகளுக்கெல்லாம் மேலான சகஸ்ரஹார ஸ்தலத்தில் உருவமற்ற உயர் பொருளை அறிவுப் பிரகாசமான அருட் பெருஞ்சோதி தெய்வமாக அறியப் பட்டு, அக்ஷர பிரம்மாகவும் **(ஓம்)** அடையாளம் காட்டப்படுகின்றது.

அதே சமயம் ப்ரஹ்மோபநிஷதம் கூற வருகின்ற உயர் ஞான உபதேசத்தைக் கவனிக்கும் பொழுது, மனித உடலில் இறைவன் உறையும் இடமாக தொப்பூழ், இருதயம், கழுத்து, மற்றும் தலை உச்சி ஆகிய நான்கு ஆதார ஸ்தலங்களை எடுத்துக் கூறி, அதன் தேவதைகளைப் பற்றியும் ஆராய்கின்றது.

மேலும், இந்த நான்கு நிலைகளிலும் மனிதனின் அனுபவங்களுக்கு உட்பட்ட மூன்று அவஸ்தைகளில் விழிப்பு நிலையில் பிரம்மாவாகவும், கனவு நிலையில் விஷ்ணுவாகவும், ஆழ்ந்த உறக்கத்தில் ருத்ரனாகவும் கொண்டு, அவர்களது காரியங்களான படைத்தல், காத்தல் மற்றும் அழித்தல் ஆகிய முத்தொழிலைப்

புரிகின்ற ஈஸ்வரத்தன்மையை இந்த உடலுக்கு வளங்குகின்றது.

அத்துடன் மனித உடலின் தலை உச்சியில் உள்ள துரியத்தில் **ஓம்** என்ற அக்ஷர பிரம்மம் இருப்பு கொண்டுள்ளதாகக்கூறி, மனித உடலின் ஒவ்வொரு ஆதார ஸ்தலத்திற்கும், ஒரு தெய்வீக ஆற்றல் வெளிப்படுவதாகவும், அந்த ஒவ்வொரு அம்சம் பொருந்திய தேவதைகளுக்கு எல்லாம் ஆதாரமான ஒரு இருப்பு எங்கும் இருக்கின்றது என்றும், அதுவே, பரப்பிரம்மம் என்றும் எடுத்துக் கூறுகின்றது.

மனித உடலின் ஒவ்வொரு உறுப்புகளின் அசைவிற்கும் ஆதாரமாக, அதனை இயக்குகின்ற ஒரு இயக்குநர் நிச்சயம் இருப்பு கொண்டு உள்ளதினால், அந்த ஏக இருப்பு ஒன்றே எல்லா தேவதைகளாகவும் தன்னை பிரதி பிம்பித்துக் கொள்கின்றது என எடுத்துக் கூறுகின்றது.

மேலும், மனித உடலில் உள்ள ஹிருதயம் எனப்படுவது, நாம் நினைத்துக் கொண்டிருப்பதுப் போன்று, '**லப்... டப்...**' என்று எப்பொழுதும் துடித்துக் கொண்டிருக்கும் பௌதீக இருதயம் அல்ல. அதைப் பற்றி இங்கு கூறப்படவில்லை.

அந்த ஹிருதயம் என்பது, எங்கும், எதிலும் இருப்பு கொண்டுள்ள அந்த பர ஆகாச தத்துவத்தை

குறிப்பிட்டு, அதுவே மனித உடலில் சிதாகாசமாகவும் (அறிவு ஆகாசம்) இருப்பு கொண்டுள்ளது என்று எடுத்துரைக்கின்றது.

அந்த ஹிருதயத்திலேயே அறிவு ஆகாசமாக இறைவன் உறைந்து இருக்கின்றான் என்றும், அதனைக் உருவகப்படுத்திக் காட்டுவதாக ஹிருதயம் இருக்கின்ற இடத்தில் **முப்புரிநூல்** தவழ்கின்ற நிலையில் அது அணியப்படுகின்றது என்று உபநிஷதம் கூறுகிறது.

இந்த முப்புரிநூல் ஆகிய பூணூலானது ஆதியில் பிரம்மா தோன்றும் பொழுதே அவரோடு சேர்ந்து தோன்றியதாகவும், அதோடு அது மனிதனுக்கு ஆதார ஸ்தலத்தை சுட்டிக் காட்டி, அவனது ஹிருதய குகையில் அதைக் கண்டு அனுபவமாக்கிக் கொண்டால், அது அந்த உடலின் ஆரோக்கியத்தை நீட்டித்து, நீண்ட ஆயுளுடன், உன்னத அறிவை உணரக்கூடிய விஷயமாகவும் உள்ளது என்று இந்த உபநிஷதத்தில் கூறப்பட்டுள்ளது.

அத்தகைய அறிவு ஒளியால் உண்டாகின்ற ஞானப் பிரகாசமும், அதன் வாயிலாக அறியாமை விலகலும், முப்புரிநூலை (பூணூல்) அணிவதால் உண்டாவதாக எடுத்துக் கூறுகின்றது.

இந்தப் பூணூலை ப்ரஹ்மோபநிஷதம் “**ஸூத்ரம்**” என்று குறிப்பிடுகின்றது.

அதாவது, ஸூசனை செய்வதால், அதாவது ஞானத்தைச் சுட்டிக் காட்டுவதாலும் இதனை **ஸூத்ரம்** என்கின்றது ப்ரஹ்மோபநிஷதம்.

ஒரு ஞானி எனப்படுபவன், குடுமியோடு தமது தலைமயிரை மழித்து, அவரது உடலில் தரித்திருக்கின்ற பூணூலையும் அகற்றி விட வேண்டும். அழியாத ஸூத்ரமாகிய பரப்பிரம்மத்தையே ஞானியாகியவன் பூணூலாகத் தரிக்க வேண்டும் என்கின்றது.

அத்தகைய ஸூத்ரத்தை அறிந்தவனே வேதத்தின் கரைகண்ட, அந்த பிரம்மத்தை உணர்ந்த **பிராமணன்** எனப்படுகின்றான்.

மற்றபடி பிறப்பால் பூணூல் அணிபவர்கள் யாரும் பிராமணர்கள் என்று கூறப்படுவதில்லை.

அதாவது, ஒருவன் தன்னுடைய நன் நடத்தையினாலும், நற்காரியங்களை மற்றவர்களுக்குச் செய்வதினாலும், தூய்மையான மனதினாலும், விழிப்புற்ற புத்தியினால் தன் உண்மை சொரூபத்தை அறிந்துக் கொண்டு, அதன் நிஷ்டையில் எப்பொழுதும் நிற்கின்ற தகுதி உடைய உயர்ஞானத்தை உண்டாக்கிக் கொண்டதாலும் மட்டுமே ஒருவன் **பிராமணன்** என்று அழைக்கப்படுகின்றான்.

அத்தகைய உயர்ந்த ஞானத்தை உடையவன் தன் உடலுக்கு வெளியே பூணூல் அணிவதை அவசியம் விட்டுவிட வேண்டும் என்றும், பிரம்ம பாவனையாகிய ஸூத்ரத்தை சூடிக்கொண்டவனே உண்மையில் தன்னை உணர்ந்த உத்தம ஞானி என்றும், அவனே பூணூல் அணிந்த அறிவாளி என்றும் அறியப்பட வேண்டும்.

அத்துடன் வைதீக கர்மங்களில் அதிகாரமுடைய பிராமணர்கள் தங்களது கருமத்திற்கு காரணமாக உள்ள அந்த மூன்று நூல்களைக் கொண்ட முப்புரி நூலாகிய பூணூல் அணிவதைப் பற்றி இங்கு கூறப்படவில்லை என்றும் அறியப்பட வேண்டும்.

பொதுவாக பூணூல் எனப்படுகின்ற முப்புரிநூல், பிராமண சமூகத்தைச் சார்ந்தோரால் உடலின் அணியப் படுகின்ற ஒரு சாதாரண நூல் ஆகும்

சாதி பிரிவில் பிராமணர் அல்லாதோர், கோயில் வழிபாடுகளைச் செய்கின்ற பொழுதும், இன்னும் சிலர் திருமணத்தின் போதும், மற்ற சில இடங்களில் சமய காரியங்களில் ஈடுபடும் போதும் அணியக் கூடிய ஒன்றாக, இந்து சமயத்தின் சடங்குகளில் ஒரு அங்கம் வகிக்கின்ற ஒரு முக்கிய பொருளாக இந்த பூணூல் விளங்குகின்றது.

இதனை ப்ரஹ்மோபநிஷதம் இந்த பூணூல் அணியும் அவசியத்தின் தொன்மையை நமக்கு விளக்குவதாகவும் உள்ளது.

இந்த பூணூல் ஏன் அணியப்படுகின்றது?

எதனை விளக்கும் முகமாக இது திகழ்கின்றது?

இந்து சமய வழிபாட்டினை மேல் நோக்காக நோக்கும் பொழுது, பல வகையில் சடங்குகளோடும், பாவனைகளோடும் கூடியதாகவே தென்படுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம் உள்ளன.

அந்த பாவனைகளையும், சடங்குகளையும் கடந்து சென்று, அவற்றின் அர்த்தங்களை புரிந்து கொள்ளும் பொழுது, இந்து சமயத்தின் இன்றியமையாத வழிபாட்டினையும், தத்துவங்களையும் அறிந்துக் கொள்ளக்கூடிய அரிய வாய்ப்புகளாக இதுப்போன்ற உபநிஷதங்கள் உதவுகின்றன.

பொதுவாக, இதுப்போன்ற இறை நுணுக்கங்கள் இந்துக்களின் வழிபாடுகளில் மட்டுமல்ல, நம்முடைய சித்தர்பெருமக்களின் பல பாடல்களைப் படித்தவர்களும் கூட, அது பெரும்பாலும் பரிபாஷைகளாய் இருப்பதை உணர்ந்திருப்பர்.

ஆகவே, இறை உண்மை, தத்துவ உண்மை எனப்படுபவைகள் எப்பொழுதும் மறை பொருளாகவே இருப்பதுப் போன்றே, அந்த இருப்பு எப்பொழுதும் மறைக்கப்பட்ட ஒன்று என்பதை, இந்து சமயத்தை பொருத்தவரை ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று ஆகும்.

அந்த வகையிலே, இந்த ப்ரஹ்மோபநிஷதத்தில் கூறப்படுகின்ற பூணூல் தத்துவமும் அடங்குகின்றது.

இன்றைய இந்து சமயத்தின் வழக்கத்தில் பொதுவாக ஒரு பிராமண சிறுவனுக்கு உபநயனம் செய்யும் பொழுது, அவசியம் அவனுக்கு பூணூல் அணிவிக்கப்படுகின்றது.

பூணூல் அணியப்படுவதற்கான தத்துவங்கள் உண்மையில் அவனுக்கு உணர்த்தப்படுகின்றதோ இல்லையோ? ஆனால், இந்த பூணூல் சடங்கு மட்டும் இன்றுவரை இன்றியமையாத கடமையாக எல்லா பிராமணக் குடும்பங்களிலும், பல காலங்களாக தொடர்ந்து செய்யப்படுகின்றது.

ஆனால், இந்த உபநிஷதம் கூற வருகின்ற உண்மையாக பூணூல் அணியப்படுகின்ற தாத்பரியம் ஆவது, அந்த பரப்பிரம்மத்தை தன்னில் தானாய் உணர்ந்துக் கொண்ட உத்தம ஞானியின் நிஷ்டையின் நிகரில்லாத நித்தியானந்த அனுபவத்தின் அடையாளமே ஆகும்.

இறைவனை எப்படி பூணூலாக உடலில் அணிவது?

இங்கு மனிதப் பிறவியின் மகத்துவத்தை உணர்ந்து, அவனிடம் காணப்படுகின்ற நல்லது, கெட்டதை பகுத்தறியும் பிரத்யேக அறிவாகிய ஆறாம் அறிவின் அவசியத்தை அறிந்துக் கொண்ட ஞானிக்கு சடங்கு, சம்பிரதாயங்களின் மீதுள்ள அபிமானம் அகற்றப்படுகின்றது.

ப்ரஹ்மோபநிஷதம் பூணூல் அணியப்படுவதன் தாத்பரியத்தினை எடுத்துக் கூறுவது மட்டுமின்றி, ஒரு ஞானியானவன் தனது உடலிலே இறைவனை எப்படி உணர்கின்றான் என்பதையும் எடுத்துக் கூறுகின்றது.

இறைவனை உடலில் உணர்தல் என்பது எப்படி செயல்முறையில் நடைமுறைப்படுத்தப் படவேண்டும் என்பதற்கான போதிய விளக்கங்கள் இங்கு கொடுக்கப் படவில்லை எனினும், எளிய முறையில் மனித மனதைக் கொண்டு, அவற்றினை ஆராய வேண்டியது அவசியமாகின்றது.

பரப்பிரம்மமான இறைவனை எங்கும், எதிலும் நீக்கமற நிறைந்தவனை, இந்த ஸ்தூல உடலின் வாயிலாக கொடுக்கப்பட்ட பகுத்தறிவின் துணைக் கொண்டு, ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களின் உண்மைத் தன்மையை ஆராய்ந்து, அலசி, அந்த

மனதினை தீர விசாரித்து, தீர்க்கமான முடிவாக, நான் அதுவாகவே இருக்கின்றேன் என்று தன் சொரூபத்தை பரமான்மாவாக உணர வேண்டும் என்பதே இங்கு கூறப்படுகின்ற முக்கிய விசயம் ஆகும்.

அத்தகைய பரமான்மா எங்கும், எதிலும் இருப்பு கொண்டுள்ளதை அறிந்து, இன்றியமையாத இந்த மனிதப் பிறவியின் உடல் என்னும் வீட்டில், அதுவே இருப்பு கொண்டுள்ளது என்பதை எளிதாக உணரக் கூடிய வகையில், இந்த உடலை ஒரு சாதனமாகக் கொண்டு, தன் உண்மை சொரூப நிஷ்டையினை உணர்ந்து, அதில் நிலையாக நின்று சாதிக்க வேண்டிய சாத்தியம் உள்ளதை யார் எளிதாக உணர்கின்றார்களோ, அவர்களே "**ஞானி**" என்று அழைக்கப்படுகின்றார்கள்.

இங்கு ஒரு ஞானியினுடைய தாத்பரியங்கள், தன்மைகள் (characteristics) சுட்டிக் காட்டப்படுகின்றன.

"**உடம்பைப் பெற்ற பயன் ஆவது எல்லாம்,**
உடலினுள் உத்தமனைக் காண்"

என்ற அவ்வையார் அவர்களின் அரிய உபதேசப்படி, யார் ஒருவர் இந்த மகத்தான மனித உடலைக் கொண்டு, மனமற்ற நிலையில் அந்த அறிவாகவே (ஆன்மாவாகவே) பிரகாசிக்கத் துடிக்கின்றார்களோ,

அவர்களே அந்த அறிவை அறிந்த அறிஞர் பெருமக்கள் (ஞானிகள்) என்று அறியப்பட வேண்டும்.

இதைப் பற்றி நமது ஆன்மீக தத்துவ நூல்கள் பலவும் அழகாக எடுத்து விளக்குகின்றன.

அந்த வகையிலே, உலகிலுள்ள பொருட்கள் அனைத்தும் உயிர்ப்பொருள்கள் மற்றும் சடப் பொருள்கள் எனவும், அதனை, நமது பெருமைக்குரிய தமிழ் இலக்கணம் **உயர்திணை, அஃறிணை** என இரு பெரும் பிரிவுகளாகப் பிரித்தும் விளக்குகின்றது.

அதிலே, உயிர்பொருள்களை **ஓரறிவு, ஈரறிவு, மூன்றறிவு, நான்கறிவு, ஐந்தறிவு** மற்றும் **ஆறறிவு** எனப் பிரிக்கப்படுகின்றது.

இதிலே, ஆறறிவு படைத்த மனித இனத்தில் மட்டுமே '**பகுத்தறிவு**' எனப்படுவதை, அறிவின் அடுத்த நிலைப் **பரிமாணம்** என்று கூறப்படுகின்றது.

அதாவது, அறிவு எனப்படுவது புத்தியை விளக்குவது அல்ல. அறிவு எனப்படுவது ஆன்மாவை அறிவது என்பதாகும்.

இதிலே, ஓரறிவு தாவரங்கள் முதற்கொண்டு, ஆறறிவு படைத்த மனிதர்கள் வரை உள்ள ஒவ்வொரு

அறிவும், அவைகளின் அனுபவமும் ஒன்றுக்கு ஒன்று மாறுபட்டது.

அந்த வகையிலே, அவைகளின் ஒவ்வொன்றின் அறிவுக்கு ஏற்றாற் போல, அவைகளின் உலகமும் இருப்பதை அவைகளினால் மட்டுமே அறியவும் முடிகின்றது.

அதாவது, அறிவாகிய ஆன்மா படிப்படியாக ஒவ்வொரு உலகத்திலும் பல பிறவிகளில் அனுபவம் உண்டாக்கிக் கொண்டு, அவைகளில் வாழ்ந்து, உழன்று அடுத்த அறிவாகிய மற்றொரு உலகத்தினுள் புகுந்து, மேலும், மேலும் பக்குவத்தில் உயரவே இந்த ஒரு அறிவு முதல் ஆறு அறிவு வரை அனுபவ அறிவு அவசியமாகின்றது.

அதன் அடிப்படையிலே, ஐந்து அறிவுகளின் அனுபவங்களை பெற்று முடித்த இந்த ஆன்மா, ஆறாவது அறிவான "**பகுத்தறிவு**" என்ற நன்மை, தீமைகளை பகுத்தறியும் உலகத்தில் நுழையும் பொழுது மட்டுமே, மகத்தான மனிதப் பிறவியின் மேன்மையை உணர்ந்து, தன் உண்மை சொரூபத்தை அறிய முடிகின்றது.

இதனைத்தான் நம் மணிவாசகப் பெருமான் தமது திருவாசகத்தில் சிவபுராணம் என்ற பகுதியில்,

**புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்** எல்லாப்
பிறப்பும் பிறந்து இளைத்தேன்

என்று பாடுகின்றார்.

மனிதப் பிறவியை எடுத்தோருக்கு பகுத்தறிவு என்ற நன்மை, தீமைகளை அறியக்கூடிய உயர் உலகம் அமையப்பெற்றதால், அவர்களால் மட்டுமே தன்னை யார்? என்று விசாரித்து, தன் உண்மை நிலையை உணரவும் முடிகின்றது.

இந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, விஞ்ஞான கருத்துகளுக்கு ஏற்றார் போலவே, இந்திய தத்துவ விளக்கங்களும் இருப்பதைக் காணமுடிகின்றது.

ஆறறிவு படைத்த மனிதன், ஓரறிவு ஜீவனாகிய நுண்ணுயிரிகளை விட ஐந்து மடங்கு கூடுதல் அறிவு ஆற்றல் பெற்றே இயங்குகின்றான்.

இத்தகைய அறிவு உலகம் என்ற வகையில், மனிதன் தன் ஆறாவது அறிவுக்கு அப்பாற்பட்ட அடுத்த பரிமாணமான ஏழாவது அறிவாகிய **துரியாதீதம்** என்ற பரவெளி அறிவுக்குள் நுழைய வேண்டுமானால்,

அவன் ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான எண்ணங்களை விடுத்து, விவேகத்துடன் மனதை விசாரித்து, அதன் ஆழமான முற்பதிவுகளான சம்ஸ்காரங்கள் அல்லது வாசனைகளை கண்டறிந்து, அதற்குக் காரணமாக இருக்கின்ற காரண தேகமாகிய சஞ்சித கர்மங்களைக் கலைந்து, ஐந்து கோஷங்களுக்கும் அப்பாற்பட்ட அந்த அறிவை அனுபவமாக அடைந்து, தன் இயல்பில், தன் உணர்வில் ஆனந்தப்பட முடியும்.

இதை தத்துவ மொழியில் கூறும் பொழுது, பக்குவத்தில் மனம் (ஜீவன்) படிப்படியாக உயர்கின்றது என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

ஆக, இதன் அடிப்படையில் எல்லோருக்கும் அமைந்துள்ள ஏறக்குறைய ஒரே மாதிரியான இந்த உடலாகிய சாதனத்தைக் கொண்டு, சாதனைகளை சாத்தியம் ஆக்கும் பொழுது, (உலக வாழ்க்கையில் ஈடுபட்டு பற்பல காரியங்களில் தன்னை திணித்துக் கொண்டு இன்ப துன்பங்களை அனுபவித்து வாழ்க்கை எனும் பாடத்தை கற்று அனுபவிக்கும் போது) அங்கு வேறுபட்டு நிற்பது, மனம் அடைந்த ஆன்மபக்குவம் என்ற ஒன்று மட்டுமே ஆகும்.

ஒவ்வொரு மனிதனின் பக்குவத்திற்கு ஏற்றாற் போன்றே, அவனுடைய நடை, உடை, பாவனைகள், சிந்தனைத் திறன், மற்றும் செயலாற்றும் திறமை போன்றவைகள் அமைகின்றன.

இந்த ஆன்ம பக்குவம் அதிகரிக்க, அதிகரிக்க அறியாமையில் ஆதி மனிதனாக இருந்த மனிதன், அந்த ஆதியும், அந்தமும் இல்லாத ஏக அறிவை தன் அறிவாக, தன்னுணர்வாக உணரக்கூடிய உன்னத நிலைக்கு உயர்ந்த உத்தம அறிஞனாக (ஞானியாக) உயரவும் முடிகின்றது.

ஆக, இங்கு எல்லோரும் அறிந்துக் கொள்ள வேண்டிய அரிய உண்மை என்னவெனில், மனிதன் எப்படி மகத்தானவனாக மாற முடியும் என்பதைப் பற்றி ஆராய்ந்துப் பார்த்தால், அவன் தனது மனதை விசாரித்து, விழிப்புற்ற புத்தியின் வாயிலாக, ஆன்ம பக்குவத்தை உயர்த்துவதின் மூலம் அது சாத்தியமாகும் என்று அறிய முடிகின்றது.

பொதுவாக, இயற்கையின் விதி (Law) என்ற ஒன்று எங்கும், எதிலும் இயங்கிக் கொண்டிருப்பினும், இந்த மகத்தான மனித உடலைக் கொண்டு மட்டுமே மனிதன் தனது சுய முயற்சியால் ஆன்மா (அறிவு), பற்றி அறிந்துக் கொண்டு, அனுபவத்திற்கு வர முடியுமே தவிர, மற்ற எந்த உடல்களின் வாயிலாகவும் இந்த ஆன்ம பக்குவத்தை உயர் பரிமாணத்திற்கு கொண்டு செல்வது என்பது சாத்தியம் ஆகாது.

ஆகவே, ஒருவன் தன் உண்மை சொரூபத்தை உணரக்கூடிய உயர் பிறப்பாகிய இந்த மனிதப் பிறவியை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளுவானாயின்,

அவன் அடுத்த பரிமாணமான ஏழாம் அறிவு கொண்ட ஏக இறைவனாக தன்னை அறியவும் முடியும் என்பதில் எள் அளவும் சந்தேகம் தேவையில்லை.

இதனை எப்படி செய்வது..?

மனிதன் ஆன்ம பக்குவத்தில் அடுத்தடுத்த படி நிலைக்கு உயர்வது என்பது, அவ்வளவு எளிதாக நினைத்த மாத்திரத்தில் செய்யப்படக்கூடிய ஒன்றன்று.

மாறாக, தனக்கு வருகின்ற துன்பங்களை சகித்துக் கொண்டு, உன்னத கட்டுப்பாடுகளும், மற்ற உயிர்களுக்கு தீங்கு விளைவிக்காமலும், விவேகத்துடன் கூடிய நம்பிக்கையும், சமாதானமும், சகிப்புத் தன்மையும், மேற்கொள்ளப்படுமாயின் மனிதன் மகத்தான அந்த உயர் அறிவு பரிமாணத்திற்கு உயர முடியும் என்பதை எடுத்துக் கூறுவதாக இந்த ப்ரஹ்மோபநிஷதம் அமைந்து உள்ளது.

அதிலும் முக்கியமாக, தன்னையும் தனது செயல்களையும், சிந்தனைப் போக்குகளையும், சற்று மனதைக் கொண்டு விசாரித்து, விவேகத்தை மேம்படுத்தி, விழிப்புற்ற புத்தி சக்தியினால் ஆராய்ந்து, தன்னிடம் உள்ள குறை, நிறைகளைக் கண்டறியும் திறன் பெற்றிருப்பதே மனிதப் பிறவியின் மகத்துவம் என்றும் அறியப்பட வேண்டும்.

ஆனால், இந்த ஆறறிவு படைத்த மனிதர்கள் பெரும்பாலும், அறிவு என்ற விசயத்தில் ஏற்றி வைத்துக் கொண்ட ஏராளாமான எண்ணங்களையே "**அறிவு**" (Knowledge) என்று எண்ணிக்கொண்டு, தங்கள் மனம் போன போக்கில் போய்க்கொண்டிருக்கின்றனர்.

உண்மையிலேயே படைக்கப்பட்ட உடல்களான ஓரறிவு முதல் ஆறறிவு வரை உள்ள அனைத்து உடல்களிலும் (உபாதிகளிலும்) "**அறிவு**" (Consiousness) என்பது மட்டுமே, எப்பொழுதும் அந்த உடல்களில் ஒட்டாமல், பிரதி பிம்பிக்கும் நிலையில் இருப்பு கொண்டுள்ளது.

ஆகவே, ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்கள் அற்ற நிலையில், என்றும் இருப்பு கொண்டுள்ள அந்த ஏக அறிவை எளிதாக அனுபவமாக்க முடியும் என்பதினால், உடல்களில் உள்ள ஆறு ஆதார ஸ்தலங்களுக்கு அப்பாற்பட்டு ஏழாவது ஸ்தலத்தில் துரியாதீத ஸ்தலத்தில், அதாவது, உடலைக் கடந்த ஏழாவது பரிமாணத்தில், நம்முடைய உண்மை இயல்பாகவே இருக்கின்ற "**இருப்பு**" (Existence) என்ற உன்னத அறிவு அனுபவம் உள்ளுணர்வாக உள்ளதை அறிஞர் பெருமக்களே (ஞானிகளே) அறிந்துள்ளார்கள் என்றால், அது மிகையாகாது.

அடுத்து, இதே ப்ரஹ்மோபநிஷதம் என்பதில் ஆன்மாவைக் கீழ் அரணியாகவும், ப்ரணவ மந்திரமாகிய ஓங்காரத்தை மேல் அரணியாகவும் கொண்டு, தியானமாகிய கடைதலை அப்பியாசம் செய்து, மறைந்திருந்த அக்னியை வெளிக் கொணர்வது போன்று, பரமான்மாவை அனுபவமாகக் கொள்ள வேண்டும்.

அத்தகைய ஆன்மாவை அனுபவமாகக் காண்பதற்கு சத்தியமும், உன்னத தவ வாழ்க்கையும் அவசியம் என்கின்றது இந்த ப்ரஹ்மோபநிஷதம்.

அதாவது, சிலந்தி எவ்வாறு நூலை உண்டாக்கி மீண்டும் தனக்குள்ளேயே அந்த நூலை இழுத்துக் கொள்கின்றதோ அதேப் போன்று, ஆன்மா விழிப்பிலும், ஆழ்ந்த உறக்கத்திலும் வெளியே அனுபவத்திற்கு வருகின்றது, மறுபடி திரும்பி உள்ளே போகின்றது என்பதை எடுத்துக் கூறுகின்றது.

மனமும், வாக்கும் எட்டிப் பிடிக்க முடியாமல் திரும்பி விடுகின்ற ஒரு திடமான நிலையையே ஆன்மாவின் பரிபூர்ண ஆனந்த நிலை என்பதை, புத்திமான்கள் மட்டுமே உணர்ந்துக் கொண்டு முக்தனாகின்றார்கள்.

எங்கும் வியாபித்திருக்கும் ஆன்மாவை ஞானத்தாலும், தவத்தின் மூலமாகவும் மட்டுமே அறிய

முடியும். அதுவே ப்ரஹ்மோபநிஷதம் வாயிலாக அறிந்து, அடைய வேண்டியது ஆகும்.

முழுமையாக இந்த உபநிஷதத்தை பார்க்க முற்படுகையில், பரப்பிரம்மமாகிய இறையைக் கண்டு, அதனை நேரடி அனுபவமாக்கிக் கொண்டு, என்றும் அந்த இருப்பில் இன்பத்துடன் இணைந்து இருப்பதையே இங்கு குறிக்கோளாகக் காட்டுகின்றது.

ஆன்மா ஒரு ஜடப்பொருளாக இல்லாமல், செயல்படுகின்ற, பிறவற்றை செயல்படுத்துகின்ற ஒன்றாகவே இங்கு காட்டப்படுகின்றது.

ஆன்மா உடலுக்குள் இருந்து அதனை தனது போக்கில் இயக்கும் வல்லமை கொண்டது. ஆன்மா நினைக்கும் வகையில்தான் உடலின் செயல்பாடுகள் அமைகின்றன.

ஆன்மா தன் நாட்டம் இழந்து, சோர்வுற்று இருக்கையில், உடல் சோர்வடைவதும், ஆன்மா மிகுந்த பலத்தோடும், வேட்கையோடும் இருக்கையில் உடல் சுறுசுறுப்பாக இயங்குவதையும் நமது சொந்த அனுபவித்தில் நாம் உணர்ந்திருப்போம்.

ஆன்மாவை அனுபவமாக அடைவது என்பது சாதாரண காரியம் அன்று என்றும், அதனை

அனுபவமாக அடையும் வழிமுறைகளை பற்றியும் இந்த ப்ரஹ்மோபநிஷதம் எடுத்துக் காட்டுகின்றது.

ஜீவன் (மனம்) ஒரு உடம்பினை எடுக்கும் போது அது தன்னோடு சேர்த்து வைத்துள்ள பாவ புன்னியங்களின் அடிப்படையிலேயே தனக்கான ஒரு உடம்பினையும், வாழ்க்கையினையும், அது வாழ்கின்ற சூழலையும் பெருகின்றது.

'**ஆகாமியம், சஞ்சிதம், பிரார்த்தம்**' எனும் மூன்று கர்மங்களும் கொண்ட மனதின் செயல்பாடுகளுக்கேற்ற வகையில் நம் வாழ்க்கையை அமைத்துத் தருகின்றன.

எந்த ஒரு மனிதனும் தனது இருப்பை (existance), அதன் காரணத்தை, அவனது ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களுக்கு ஏற்பவே, மாறுபட்ட குணாதிசியங்களோடு விளங்குகின்றார்கள்.

உருவத்திலும், குணாதிசயத்திலும், திறமையிலும், அவர்களது வாழ்வின் போக்கினை அமைப்பதிலும், வித்தியாசமற்ற இருவரைக் காண்பது இயலாது.

ஆக, ஒவ்வொருவரையும் ஒரு தனிப்பட்ட மனதாகக் காட்டுவது, மறையாக இருந்து கொண்டு அந்த மனதை (ஜீவனை) வடிவமைக்கின்ற, தொழிற் படுத்துகின்ற அந்த ஜீவனுக்குறிய கர்மமே ஆகும்.

ஆன்மா ஒரு பொழுதும் கர்மங்களால் பாதிக்க முடியாது. இங்கு பாதிப்புகளாக வெளிப்படும் இன்ப, துன்பங்கள் எல்லாமே ஏற்றி வைத்துக் கொண்ட மனதிற்கு மட்டும்தான் என்பதை அறிந்து, அவரவர்கள் எண்ணங்களுக்கு ஏற்றவாறு வாழுகின்ற வாழ்க்கையில், அவர்கள் செய்த பாவ, புண்ணியங்களுக்கு ஏற்ப ஒரு பிறவியினை பெற்று, மேலும் தனது **'தேடலை',** எடுத்திருக்கின்ற இந்தப் பிறவியிலும் தொடர்கின்ற வகையிலேயே இந்த பிறப்பு அமைந்துள்ளது.

ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களால் உண்டான மனம், அந்த எண்ணங்கள் அற்ற தூய மனதினால் பரப்பிரம்மத்தை தன்னுள்ளே ஐக்கியப்படுத்தி, அதனோடு தான் இரண்டறக் கலக்கின்ற போதே, தொடர்ச்சியான இந்த உடல் வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி உண்டாகி விடுகின்றது.

அந்த உன்னத உயர் நிலையை அடைகின்ற வரையில், பல பல காரியங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு எதிலெல்லாம் மனம் செல்கின்றதோ அதனை எல்லாம் தேடி அனுபவித்து கற்றுக்கொண்டு பின்னர் அதனை விட மேலானவற்றைத் தேடும் பணியில் ஈடுபடும் சுபாவத்தோடு மனிதன் விளங்குவது என்பது அவனது ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களினால்தான் என்பதை அறிந்துக் கொள்ள வேண்டும்.

அத்தகைய மனித ஸ்தூல உடலுக்கு கருவிகளாக ஐம்புலன்கள் இருக்கின்றன. அதுப்போன்று சூக்கும உடலான மனதிற்கு கருவிகள் எவை?

ஒரு உடல் என்பது, உயிர் இல்லாமல் இயங்க முடியாது. உயிர் உடலை விட்டு வெளியேறி விடுகின்ற நிலையில், அந்த உடல் தனக்குள்ளே இருக்கின்ற எந்த கருவிகளையும் செயல்படுத்தக்கூடிய திறனை இயல்பாகவே இழந்து, பிணமாகி விடுகின்றது.

ஆக, உயிர் தனது ஸ்தூல உடல் செயல்களை இரண்டு வகையில் நடைமுறைப் படுத்துகின்றது. அந்த வகையிலே, ஸ்தூலப்பொருளான உடம்பினையும், அதன் கருவிகளையும் (புலன்களையும்) செயல் படுத்துவது என்பது, சூக்குமப்பொருளான மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற ஆகியவற்றினைக் கொண்டு தொழிற்படுத்துவது எனலாம்.

இதிலே, ஒன்று கண்ணுக்குத் தெரிகின்ற கை, கால், வாய், காது, இருதயம், நரம்புகள் போன்ற உடற்பாகங்கள். மற்றொன்று, நம் கண் பார்வைக்குப் புலப்படாத எண்ணங்கள், சிந்தனைகள், ஆசைகள், அறிவுத்திறன் போன்றவைகள் எனலாம்.

மனிதனின் இயக்கத்தை மேலோட்டமாகப் பார்க்கின்ற போது வெளிப்படையாகத் தோன்றுகின்ற

குணங்களை வைத்துத்தான் நாம் ஒருவரை எடை போடுகின்றோம்.

ஒருவரோடு நாம் பழக வேண்டுமானால் முதலில் நமக்கு அவரைப்பற்றிய ஒரு பிம்பம் (image) தேவைப்படுகின்றது.

உதாரணமாக, 'அவன் மிகவும் திறமையானவன். நன்றாகப் பேசும் திறன் உள்ளவன். தனது அலுவலகத்தில் நல்ல பொறுப்பில் இருப்பவன். நண்பர்களோடு அன்பாக பழகுபவன். எதிலும் வேகமாக முடிவெடுப்பவன்' என ஒருவனைப் பார்த்து, அவனோடு நட்பு கொண்டு, அவனோடு பழகிய சில நிமிடங்களில், நமது மூளை அவைகளை உடனே பதிந்து கொள்கின்றது.

[இந்த பதிவு என்பது ஸ்தூலப்பொருளான மூளையில் பதியப்பட்டாலும், அதன் தாக்கங்கள் மனதின் வாயிலாகவே வெளிப்பட்டுகின்றன.]

இந்த கணிப்பின் அடிப்படையிலேயே, நாம் அவனைப் பார்க்கின்ற, நினைக்கின்ற ஒவ்வொரு முறையும் நமக்கு அவனைப்பற்றிய ஒரு காட்சி கிடைக்கின்றது.

அதனைப் பொறுத்தே, அவனைப்பற்றிய நமது சிந்தனைகளும், வெளிப்பாடுகளும் அமைகின்றன.

இந்த அவனைப் பற்றிய ஒரு பிம்பம் (image) என்பது வெறும் வெளித்தோற்றத்தின் அடைப்படையில் மாத்திரம் அமைந்த ஒன்றல்ல. ஸ்தூல உடம்பின் கருவிளோடு, சூக்கும உடம்பின் கருவிகளும் இணைந்து செயல்பட்டு இந்த முடிவினை, ஒரு விளக்கத்தினை ஒரு மனிதருக்குத் தருகின்றது.

ஸ்தூல உடம்பினது செயல்பாடுகள் சூக்கும கருவிகளான **மனம், புத்தி, சித்தம்,** மற்றும் **அஹங்காரம்** போன்றவைகளின் செயல்பாடுகளிலிருந்து பிரிக்க முடியாதவை.

இந்த ஸ்தூல கருவிகளும், சூக்கும கருவிகளும் என இரண்டும் இணைந்தே செயல்படுபவைகளாக உள்ளன.

ஒவ்வொரு காரியத்தின் செயல்முறைகளும் அதன் முடிவுகளும், அதனால் அந்த மனம் கற்றுக் கொண்ட பாடங்களும் அந்த உடலின் மூளையில் பதியப்படுகின்றன.

அந்த பாடங்களின் அடிப்படையிலேயே மனம் தன்னை தானே திருத்திக்கொள்ள முயற்சிக்கின்றது. வாழ்க்கைப் போராட்டத்தில் வெல்ல முயற்சிக்கின்றது. மேலும் தனது திறமைகளை வளர்த்துக் கொள்ளவும் ஆசைப்படுகின்றது.

ஒவ்வொரு மனிதரும் இந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அதே சமயத்தில், தனக்கென்று அமைந்திருக்கின்ற, பிற மனிதர்கள் யாருக்கும் தெரியாத மற்றொரு சுக்கும உலகத்திலும் வாழ்கின்றார்.

இதுவே, இந்த மாயா உலகம்.

இந்த உலகில் ஒரு மனிதர் தன்னோடு உரையாடிக்கொள்ள முடியும். தன்னையே ஒரு சோதனைப் பொருளாக எடுத்துக் கொண்டு தனது நடவடிக்கைகளை அலசிப்பார்க்க முடியும். இதனை நாம் எல்லோரும் அனுபவித்துக் கொண்டுதான் இருக்கின்றோம்.

சாதாரண மனிதர் தன்னை மட்டுமே அலசிப்பார்க்கும் சக்தியைக் கொண்டவர். ஒரு ஞானியோ தன்னை உணரும் அதே தருணத்தில் பிறரது மாயா உலகத்தில் புகுந்து, அவரது எண்ணங்களையும், கர்மங்களையும், அதனால் விளையக்கூடிய பலா பலன்களையும் அறிந்தவராகின்றார்.

ஒரு ஞானி என்பவர் மற்ற சாதாரண மனிதர்களிலிருந்து மாறுபட்டு நிற்பவர்.

பரப்பிரம்மத்தை தன்னுள்ளே அனுபவமாகக் கண்டு, ஐக்கியப்படுத்திக் கொண்டு மனித குணாதி சயங்களாகிய ஆசை, பொறாமை, காமம், விருப்பு,

வெறுப்பு போன்றவற்றிலிருந்து தன்னை விலக்கி வைத்து, அந்த ஏக இறைவனோடு இணைந்து வாழ்பவர் மட்டுமே **ஞானி** எனப்படுகின்றார்.

பரப்பிரம்மத்தை உணர்ந்து வாழ்கின்ற உன்னத இல்லமாக தனது உடம்பினை வைத்திருப்பவருக்கு பரப்பிரம்மத்தின் மகா சக்திகள் படிப்படியாக அமைந்து, மற்ற பிற உயிர்களுக்கு உதவும் வகையிலேயே, இவர் எடுத்திருக்கின்ற இப்பிறவியும், இருக்கின்ற வாழ்க்கையும் அமைந்து விடுகின்றது.

நமது சனாதன தர்மத்தின் பாரம்பரியத்தில் இதுப்போன்ற ஞானிகளின் இன்பகரமான வாழ்க்கை உதாரணங்களுக்கு பஞ்சமே இல்லை.

இந்த தெய்வீக சக்தியானது நன்மையைக் கொடுக்கின்ற அதே வேளையில், ஒரு சிலர் இந்த சித்திகளை அனுபவிக்கின்ற ஆரம்ப நிலையிலேயே எல்லாம் தெரிந்த ஞானிகளாக தன்னை நினைத்துக் கொண்டு இந்த மாயா உலகத்தின் பெருமைகளைக் கண்டு அனுபவித்தவுடன் உடனே தன்னை இறைவனின் பிரதிநிதி என்று நினைத்துக் கொண்டு அகங்காரத்தோடு இந்த சக்திகளை தீயவழிகளில் பயன்படுத்தி தனக்கே துன்பத்தை வரவழைத்துக் கொண்டவர்களும் அனேகர் உண்டு.

இதுப்போன்றவர்கள் தனக்குக் கிடைத்து இருக்கின்ற ஒரு சில மகத்தான சக்திகளுக்கு உள்ளேயே (சித்திகள்) அடங்கி விடுகின்ற அறியாமை நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

இந்தச் செயலினால் அவர்களது மனம் மேலும் கர்மங்களாக பாவ, புண்ணியங்களை ஈட்டுவதோடு, முழுமையான ஆன்ம விடுதலை பெறுவதிலிருந்து தாமதிக்கின்ற கட்டாய நிலைக்கும் அவர்கள் தள்ளப் படுகின்றார்கள்.

பரப்பிரம்மத்தை மனதோடு ஒன்ற வைத்து, ஒரே அறிவாக உரு மாறுவதற்குத் தேவையான உன்னத பயிற்சி முறைகளாக கூறப்படுகின்ற தியானம் என்பது, மனம் எதைப் பற்றியும் சிந்திப்பது அல்ல.

எந்த ஒன்றையும் சிந்திக்காமல் இருப்பதுவே தியானம். எதுவுமே மனதில் இல்லாமல் இருப்பதுவே தியானம். அதாவது, மனம் முழுவதுமே காலியாக இருப்பது.

எதை பற்றியோ சிந்திப்பது என்றால், சிந்திக்கும் நான், சிந்திக்கப்படும் அது என்ற இரண்டு இருக்கும் அல்லவா?

தியானத்தில் அந்த இருமைகள் மறையும். நான், அது என்று வேறுபாடுகள் மறைந்த பின்பு எதைப்பற்றி சிந்திப்பது?

எதை தியானம் செய்வது?

அந்த சூன்ய நிலையை ஒரு நிமிடம் கூட நம்மால் அடைந்து நிற்க முடியாது. ஒரு நொடியில் ஏதோ ஒரு சிந்தனை வந்து விடும். ஒன்று வந்தால், அதில் இருந்து ஒன்று மற்றொன்றாக மாறும். தொடர் சங்கிலி போன்று, பல்வேறு எண்ணங்கள் வந்து கொண்டே இருக்கும்.

அத்தகைய எண்ணங்களை தவிர்த்து, மனம் ஏக அறிவுடன் அடைக்கலம் அடைய வேண்டியதற்காக செய்யப்படுகின்ற தியான வழி முறைகளில் **ஓம்** என்ற அக்ஷர தியானம் பற்றி இங்கு கூறப்படுகின்றது.

அதாவது மந்திர உலகத்தில் மனதை சஞ்சரிக்க வைப்பது. இந்த மந்திர உலகம் அக்ஷர சக்கரங்களால் ஆனது.

இந்த மந்திர உலகத்தில் பயணிப்பதற்கு இந்த உடல் தேவையற்றதாக இருப்பினும், அந்த மந்திர உலகத்தினுள் செல்வதற்கு நுழைவாயிலாக அமைவதும் இந்த ஸ்தூல உடலே ஆகும்.

ஸ்தூல உடலில் இருக்கின்ற ஆறு ஆதார சக்கரங்களை முடுக்கி, அக்னியை எழுப்பி விட மனம் மந்திர உலகத்தினுள் நுழைகின்றது.

[இந்த அக்னி மண்டலம் மூலாதாரத்திற்கு இரண்டு விரல் அளவு மேலே, பிருதிவியும், அப்பும் (மண் தத்துவமும், நீர் தத்துவமும்) சேர்ந்த இடத்தில் முக்கோணமாய் நான்கு இதழ் தாமரை வடிவத்தில் உள்ளது.]

இந்த மந்திர உலகம் முற்றிலும் மந்திரங்களால் ஆனது. ஓங்காரமே அவற்றிற்கு மூலமாகின்றது.

ஓங்காரம் பிரிந்து, பலப்பல மந்திரங்களாக உருவெடுக்கின்றது. அந்த ஓங்கார அக்ஷரத்தினுள்ளே புகுந்து, அதுவே தானாகி மனம் தியானிக்க வேண்டும்.

அப்பொழுது ஆறாவது ஸ்தலத்தில் அந்த அறிவுப் பிரகாசம் வெளிப்பட்டு, அந்த அறிவாகவே உள்ள அந்த பரப்பிரம்மத்தை உணரமுடியும். அதோடு மனம் இரண்டறக் கலந்து இன்புற்றிருக்கவும் முடியும்.

சிவவாக்கிய சித்தர் ஓம்காரத்தையும், அக்ஷர சக்கரங்களையும் விளக்குகின்ற தனது ஒரு பாடலில் இப்படிப் பாடுகின்றார்.

"ஓரெழுத்து உலகெல்லாம் உதித்த அட் சரத்துள்ளே ஈரெழுத்து இயம்புகின்ற இன்பமேதெ அறிகிலீர் மூவெழுத்து மூவராய் மூண்டெழுந்த மூர்த்தியை நாலெழுத்து நாவிலே நவின்றதே சிவாயமே"

மனதினை மகத்தான அந்த ஆன்மாவில் ஒடுக்குவது எப்படி?

அதற்கான முதல்படி பேச்சை குறைக்க வேண்டும். ஆம்! பேசும் பேச்சுக்கள் இரண்டு வகைப் படுகின்றது. அதிலே ஒன்று வாய் பேச்சு, மற்றொன்று மனப்பேச்சு.

வாய் ஓயாமல் புறத்தில் எதையாவது பேசிக் கொண்டே இருப்பதுப் போன்று, மனம் எப்பொழுதும் எதையாவது சிந்தித்தவாறு அகத்தில் பேசிக்கொண்டே இருக்கின்றது.

அத்தகைய புறப் பேச்சுக்களாகிய பேசும் எண்ணங்களை அகப்பேச்சு பேசுகின்ற மனதின் வாயிலாக விசாரணை செய்து, அதில் ஒடுக்க வேண்டும், அந்த புறப்பேச்சு ஒடுக்கப்பட்ட மனதினை அகப்பேச்சு ஒடுக்கப்பட வேண்டி, விழிப்புற்ற புத்தியில் ஒடுக்க வேண்டும். இவ்வாறு, பேச்சுக்கள் ஒடுக்கப்பட்ட மனமானது விழிப்புற்ற புத்தியில் ஒடுக்கப்பட வேண்டும்.

அதாவது, விழிப்புற்ற புத்தியானது (மனமானது) அந்த ஏக ஆன்மாவை அறிந்து, அதில் ஒடுங்கி விடும்.

இந்த வழிமுறைகளின் வாயிலாக இந்த அக, புற பேச்சுக்களை விழிப்புற்ற புத்தியில் ஒடுக்கி, ஆன்மாவை அனுபவமாக அறிவது மட்டுமே எண்ணங்களற்ற நிலையில் அந்த ஆன்மாவுடம் மனம் ஐக்கியம் ஆகின்ற நிலை எனப்படுகின்றது.

இந்த மனமற்ற நிலையில் அந்த பரமான்மாவுடன் ஒன்றுகின்ற ஒரு உயர் பரிமாணம் என்பது எல்லோருக்கும் அவ்வளவு எளிதாக சாத்தியம் ஆகக் கூடிய செயல் அன்று.

இது உலக வாழ்க்கையிலேயே தன்னை முற்றிலும் ஐக்கியப்படுத்திக் கொண்டுவிட்ட பலருக்கும் உண்மையற்ற ஒன்றாகவே தென்படும்.

மாயா உலகத்தின் இருப்பையும், அதன் உண்மைகளையும் அவர்களால் இல்லை என்று ஏற்றுக் கொள்ள முடியாது. மாறாக மனிதர்கள் வாழ்கின்ற இந்த உலகமும், அதனுள் நாம் அனுபவிக்கின்ற விசய சுகங்களும் உண்மையாகவே அவர்களுக்கு தென்படும்.

மனம் (ஜீவன்) இயற்கையிலேயே சுதந்திரத் தன்மையைக் கொண்டது. அந்த சுதந்திரத்தை மனம்

நல் வழியில் செல்ல தேர்ந்தெடுக்கும் போது மட்டுமே, மனம் தனது பக்குவத்தில் உயர்ந்து பற்றற்ற முக்தனாகின்றது. இதனை விளக்குவதாகவே இந்த பிரம்மோபநிஷதம் அமைந்துள்ளது.

ஆகவே, இந்த உபநிஷதம் மனித உடல்களின் முக்கிய இடங்களாக நான்கு பகுதிகளைக் குறிப்பிட்டு, அதன் வழிபடு கடவுள்களாக மூன்று மூர்த்திகளையும் குறிப்பிட்டு, அவர்களைப்பற்றி கூறும் பொழுது, தொப்பிள் குழியில் விழிப்பு நிலையில் பிரம்மாவாகவும், ஹிருதயத்தில் கனவு நிலையில் விஷ்ணுவாகவும், உறக்க நிலையில் கழுத்தில் ருத்ரனாகவும், தலை உச்சியில் துரீய சமாதியில் ஓம் என்ற அக்ஷர பிரம்மமாகவும் தியானிக்க வேண்டும் என்கின்றது.

அத்தகைய மனதின் தியானத்திற்கு உரிய அந்த பரமபுருஷன் மனதில்லாமல் நினைப்பவனாகவும், காதில்லாமல் கேட்பவனாகவும், கை, கால்கள் இல்லாமல் செயல் புரிபவனாகவும், எங்கும் வியாபித்தவனாகவும், ஸ்வயம் ஜ்யோதி ஸ்வருப ரூபமாகவும் உள்ளான். அதுவே, நான்காம் நிலை நிர்வாண நிலையான பரப்பிரம்மமாகும்.

அதில் உலகம் உலகமாயில்லை, தேவர்கள் தேவர்களாக இல்லை. மனிதர்கள் மனிதர்களாக இல்லை. எல்லாம் ஒன்றேயான பரபிரம்மமாக மட்டுமே விளங்குகின்றது.

உலகக் கனவிலிருந்து விழித்துக்கொண்ட ஞானியானவன் இந்நிலையில் சர்வ வல்லமை உள்ளவனாக விளங்குகின்றான்.

பரமாத்மாவே தெய்வமாகவும், பிராணனாகவும் மற்றும் அறிவாகவும் எல்லோருடைய உள்ளத்திலும் விளங்குகிறது.

இதைக் குறிப்பிடுவதற்கு தான் மூன்று இழைகளையுடைய பூணூல் அணியப்படுகிறது.

ஆகவே, வெளிப்படையான பூணூலை விட்டு விட்டு, பிரம்மபாவனையகிற அகப் பூணூலை ஆன்ம ஞானத்தை அடைந்த துறவி அணிகிறான். அந்த ஞானியின் பூணூல் ஒரு பொழுதும் அசுத்தமாகாது.

அத்தகைய ஞானிக்கு, அவனது அறிவே சிகையாகவும், ஞானமே பூணூலாகவும் உடைய சிறப்புள்ளவர்கள். அவர்கள் அடைந்த ஞானத்தைபோல் புனித தன்மை அளிக்க கூடியது வேறு ஒன்றுமில்லை. அவனுக்கு மட்டுமே பிராமணத்துவம் முழுவதும் (வேதம் முழுவதிற்கும் அதிகாரம்) சித்திக்கும் என்று வேதம் அறிந்தவர்கள் கூறுகிறார்கள்.

இதிலே, ஞான சித்தியாவது ஈஸ்வரனை உள்ளத்தில் காண்பதாகும். அப்படி காண்பவர்களுக்கு

அழியாத சுகம் என்றும் உண்டு. அதுவே அஞ்ஞானிகளுக்கு அத்தகைய சுகம் கிடையாது.

சத்தியத்தையும், தவத்தையும் கைக்கொண்டு முயல்பவர்களுக்கு எள்ளில் மறைந்திருந்த எண்ணெய் போலவும், தயிரில் மறைந்திருந்த வெண்ணை போலவும், அரணிக்கட்டையில் மறைந்திருந்த நெருப்பு போலவும், அவர்களது உண்மையான சாதனையின் பயனாக மறைந்திருக்கும் ஆன்மா அனுபவத்திற்கு வெளித்தோன்றும்.

அத்தகைய ஆன்ம சாக்ஷாத்காரம் மனதிற்கும், வாக்கிற்கும் எட்டாத ஆனந்த நிலை ஆகும். அதை உணர்ந்துக் கொண்ட புத்திமான் முக்தனாகின்றான். இதுவே, ப்ரஹ்மோபநிஷதம் மூலம் அடையப்பட வேண்டிய பதவி.

ஓம் தத் சத்!

ப்ரஹ்மோபநிஷதம்



“நான் இந்த பிரபஞ்சத்தில் இருப்பதைப் போன்று, பிரபஞ்சம் என்னுள் இருக்கிறது”

- சுவாமி பிரபஞ்சநாதன்